
www.padippakam.com

ஏப்ரல் '95 மக்கள் கலை இலக்கியக் கழக மாத இதழ் விலை:ரூ.3.50

# புதிய கலாச்சாரம்



## தாக்கரேயின் ஆசி பெற்ற மணிரத்தினத்தின்



# பம்பாய்

படிப்பகம்

www.padippakam.com

## இந்துமதவெறி:

# காவல்துறை அதிகாரி தரும் ஆதாரங்கள்

விபூதி. என்.ராய் எல்லைப்புறப் பாதுகாவல் படையில் டி.ஐ.ஜியாகப் பணிபுரியும் அவர் தற்போது 'மதவெறியும் காவல்படையும்' என்பது பற்றிய ஆய்வில் இறங்கியுள்ளார். நேரடியாக அவரது பணிக்காலத்தில் அவர் சந்தித்த மதக் கலவரங்கள் அவரது ஆய்வுக்கு அடிப்படையாக உள்ளன.

காவல்துறை முழுக்க இந்துத்துவ வெறிக்கு ஆட்பட்டுள்ளது என்பது அவரது ஆய்வு முடிவு. ராய் காவல்துறை ஊழியர் மட்டுமல்ல; எழுத்தாளரும் கூட. 'நகரத்தில் தடைச் சட்டம்' என்பது அவர் எழுதிய நாவல். 1980 அலகாபாத் நகரத்தில் இந்து வெறியர்களின் கொலை வெறியாட்டம் நடந்ததைச் சித்தரிக்கிறது இந்நாவல். இதற்காகவே விசுவ இந்துபரிசத் பொதுச்செயலாளர் அசோக் சிங்கால் அந்நாவலை தெருவில் போட்டு எரித்தார்.

காக்கிச்சடைக்குள்ளே மனித இதயங்கள் மிகக் குறைவு. உயர் அதிகாரிகளுக்கும் அரசுக்கும் அஞ்சாமல் நியாயமென்று பட்டதை அஞ்சாமல் செய்கின்ற வலிமை கொண்ட இதயங்களோ வெகு சில. அத்தகையோரில் ஒருவர் ராய்.

ராயைப் பொறுத்தவரை, மக்கள் குறிப்பாக முசுலீம் சிறுபான்மையினர் போலீசின் மீது நம்பிக்கை இழந்துவிட்டார்; தற்போதைக்கு ராணுவம், எல்லைப் பாதுகாப்புப்படை, சி.ஆர்.பி.எஃப் படை, ஆகியவற்றின் மீது கொஞ்சம் நம்பிக்கை வைத்துள்ளார. வளர்ந்துவரும் மதவெறிக்கு அரசின் இந்த அங்கங்களும் விரைவிலேயே மலியாகவிடக் கூடும் என்றும் சொல்கிறார். மதவெறிக்கு இலக்கான பகுதிகளுக்கு இராணுவம் அடிக்கடி அனுப்பப்பட்டாலே போதும், அவைகளுக்கும் மதவெறி பற்றிக் கொள்ளும் என்று நிச்சயமாகச் சொல்கிறார்.

''**கேள்வி:** காவல்துறையில் பரவியிருக்கும் மதவெறிச் சார்பு எந்த அளவு பாரதூரமானது? எந்த அளவு பரவி இருக்கிறது?

**பதில்:** உடனே வேகமாகக் களையப்படவேண்டிய அளவு அபாயமானது. 'எந்தப் பக்கமும் சாராமல் இருப்போம்' என்று வேலையில் சேரும் போது உறுதி மொழி எடுக்கிறோம். ஆனால் நேர்எதிராக ஒரு பக்கச் சார்பாகவே காவல் துறை சரிந்துள்ளது. எங்கேயாவது அத்திபூத்தாற்போல ஒரு நாகரிகமான, மனிதத்தன்மை படைத்த, மதச் சார்பற்ற சில அதிகாரிகள் பற்றிய சம்பவங்கள் கேள்விப்படும் போது தெம்பாக இருக்கும். ஆனால் இது விதிவிலக்குதான். காவல்துறையில் இருப்பவர்கள் முதலில் தனது துறை சரியில்லை என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும். மிக மோசமான நிறுவனம் என்பதை அவர்கள் ஒத்துக் கொண்டால அதைக் களைய வழியம் தேட முடியும்.''

ஆதாரங்கள் இல்லாமல் ராய் குற்றம் சாட்டவில்லை. ''1990-ல் முலாயம் சிங் ஆட்சியில் இருந்தபோது அயோத்தியில் பாபர் மசூதியை பாதுகாத்த போலீசார் 300 பேர் மட்டுமே. ஒரு நூறுபேர் வெறிகொண்டு மசூதியின் கூரை மீது ஏறியபிறகு கூட அதற்கு ஒரு கேடும் செய்ய முடியவில்லை.

ஆனால் இரண்டு ஆண்டுகள் கழிந்த பின்னால் அதே இடத்தைப் பாதுகாக்க உ.பி. காவல்படை, சி.ஆர்.பி.எஃப் இந்திய-திபேத்திய எல்லைப்பாதுகாவல் படை எல்லாம் சேர்ந்து 20,000க்கும் மேல் படையினர் குவிந்திருந்தார்கள். ஒரு மூவாயிரம் நாலாயிரம் கரசேவக வன்முறைக்கும்பல் மட்டுமே மசூதியின் அருகே நெருங்கியிருந்தது. இதை உளவுத்துறை நிறுவனம் எடுத்துள்ள வீடியோப்படமே காட்டுகிறது. எண்ணிக்கையில் அதிகமான படையை வைத்துக் கொண்டு குறைவான கரசேவகர்கள் நடவடிக்கை எடுத்திருக்க முடியாதா?

ஆனால் எடுக்கவில்லை. காரணம் என்ன? அதே வீடியபேபடம் பாபர் மசூதி இடிக்கப்பட்ட போது போலீசார் இரண்டு கைகளையும் தூக்கிக் கொண்டு சந்தோஷத்தில் குதித்ததைக் காட்டுகிறது. மாவட்ட மேஜிஸ்திரேட்டும் மற்ற அதிகாரிகளும் சந்தோஷத்தில் குதித்தார்கள். கரசேவகத்தினர் தடுக்காததற்கு இதுவே முக்கியக் காரணம்.'' என்று ஆதாரபூர்வமாக அல்பலப்படுத்துகிறார் ராய்.

''தங்கள் பணியில் அரசியல்வாதிகள் எப்போதும் குறுக்கிடுவதாகச் சொல்கிறார்களே, உங்கள் கருத்தென்ன'' என்று ராயிடம் கேட்கப்பட்டது. அவர் சொன்னார். ''பாராளுமன்ற ஜனநாயகத்தில் அரசியல்வாதிகள் ஒரு தீர்மானமான பங்கை வகிக்கிறார்கள். நான் மறுக்கவில்லை. ஆனால் தன் மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் செயல்பட்டு ஒரு கலவரத்தைத் தடுத்து நிறுத்தியதற்காக எந்த ஒரு அதிகாரியையும் தண்டனைக்குள்ளாக்கியதாக என் பணிக்காலம்முழுதும் எங்கேயும் நான் கேள்விப்பட்டதில்லை. நமது அதிகார வர்க்கத்தின் தோல்விகளை மூடி மறைக்க அரசியல் வாதிகளிடம் ஒளிந்து கொள்கிறோம்.''

உத்தர பிரதேசத்தின் பிஏசி படை பற்றியும் கடுமையாக விமரிசித்தார் ராய். ''ஆர்.எஸ்.எஸ்.உறுப் பினர்கள் காக்கி அரைக்கால் சட்டை போடுகிறார்கள். பிராந்திய ஆயுதப்படை காவலர்கள் காக்கி முழுக் கால் சட்டை போட்டிருக்கிறார்கள். வேறு வித்தி

(தொடர்ச்சி 23-ம் பக்கம்)

> ''ஆர்.எஸ்.எஸ். உறுப்பினர்கள் காக்கி அரைக்கால் சட்டை போடுகிறார்கள். பிராந்திய ஆயுதப்படை காவலர்கள் காக்கி முழுக்கால் சட்டை போட்டிருக்கிறார்கள். வேறு வித்தியாசமே இல்லை. 1987-ல் பி.ஏ.சி. மீரட்டில் உள்ள ஹசீம்புராவிலிருந்து 40 முசுலீம்களைப் பிடித்தார்கள், காசியாபாத்துக்கு டிரக்கில் ஏற்றிக் கொண்டு போகும் வழியிலேயே சுட்டுக் கொன்று ரத்தக் களறி செய்து வெறியாட்டம் போட்டார்கள். அக்கொலைகாரர்களை இன்று வரை தண்டிக்கவில்லையே ஏன்'' - இது ராயின் கேள்வி.



படிப்பகம்

www.padippakam.com

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

● போர்: 12
● குரல்: 11
● ஏப்ரல் '95

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 3.50
ஆண்டு சந்தா: ரூ. 42.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 9

படைப்புகள் அனுப்பவும்
தகவல்களுக்கும்
இரா.சீனிவாசன்,
3, நாலாவது தெரு,
செகந்நாதபுரம்,
சேத்துப்பட்டு,
சென்னை-600 031.

# சிவசேனா நாஜிக்கள் பரப்பும் பகிரங்க பயங்கர பீதி

மராட்டிய மாநிலத்தில் சிவசேனா - பாரதீய ஜனதா ஆகிய மராட்டிய இனவெறி - இந்துமத வெறி பாசிச கூட்டணிக் கும்பல் ஆட்சிக்கு வந்த ஒரு சில நாட்களிலேயே தனது கோர முகத்தைக் காட்டிவிட்டது. ''இந்தியக் குடிமக்கள் பம்பாய் நகருக்குள் குடியேறுவதற்கு அனுமதிச் சீட்டுப் பெறும் முறை ஒன்றைக் கொண்டு வருவது'' என்று சிவசேனா - பாரதீய ஜனதா கூட்டணி அரசு முடிவு செய்துள்ளது. ''நகர்ப்புறக் குடியேற்றத்தினால் பம்பாய் பிதுங்கி வழிகிறது; இதனால் பெரும் சமூகப் பிரச்சினைகள் எழுகின்றன'' என்று அதற்குக் காரணமும் அளித்துள்ளது. ஏற்கனவே அடிக்கடி இன, மதக் கலவரங்கள் - படுகொலைகளை நடத்தி வேறு மாநிலத்தில் இருந்து பம்பாயில் குடியேறிவர்களை, குறிப்பாக தமிழர்களையும் மலையாளிகளையும் வேறுமதச் சிறுபான்மையின்மை, குறிப்பாக இசுலாமியரையும் விரட்டியடிக்க அந்த இன, மதவெறி பாசிஸ்டுகள் பலமுறை முயன்றிருக்கின்றனர். இப்போது பாசிச அட்டூழியத்திற்கு சட்டத்தையும் அரசு எந்திரத்தையும் கூட பயன்படுத்திக் கொள்கிறது.

இதற்கு வேறுபிற தரப்புகளிடம் இருந்து எதிர்ப்பும் கண்டனமும் கிளம்பிய போதும் கூட, ''இன்னமும் இறுதி முடிவெடுக்கவில்லை, பரிசீலனையில்தான் இருக்கிறது; ஆனால் இந்தியக் குடிமகன் என்பதாலேயே எங்கு வேண்டுமானாலும் குடியேறுவதற்காக ஒட்டு மொத்தமான குடியுரிமையை அரசில் சட்டம் இடம் தரவில்லை'' என்றுதான் மராட்டிய ஆட்சியாளர்கள் கூறுகின்றனர். இது அயோத்தி பாபர் மசூதியை இடிப்பதற்கு முன்பு உத்திரப் பிரதேச பாரதீய ஜனதா அரசும், இந்து பாசிச பரிவாரங்களும் கூறிய விளக்கத்தை ஒத்ததுதான். அந்தச் சம்பவத்தில் அயோத்தி மசூதி இடிப்பதற்கு உடந்தையாக இருந்ததைப் போலவே, ''பம்பாய் நகர அனுமதி முறை'' விவகாரத்திலும் மத்தியில் ஆளும் பாசிச சகுனி நரசிம்மராவ் அரசு நயவஞ்சகமாக சிவசேனா பாரதீய ஜனதா முடிவை ஆதரிக்கிறது.

சிவசேனா - பாரதீய ஜனதா கூட்டரசு பதவியேற்ற பிறகு, நற்பயன் சர்வாதிகாரி என்றும் ''இட்லரின் ரசிகர்'' என்றும் கூறிக் கொள்ளும் சிவசேனா கும்பலின் குரு பீடம் பால் தாக்கரே நஞ்சு கக்கத் துவங்கிவிட்டார். ''சட்ட விரோதமாகத் தங்கியுள்ள வங்கதேச, பாகிஸ்தானியர்களைக் கண்டுபிடித்து சிவசேனைத் தொண்டர்கள் வெளியேற்ற வேண்டும். போலீசார் அவர்களுக்கு உதவ வேண்டும்'' என்று உத்திரவிட்டுள்ளார். ''இது காலாவதியான ''விசா'' வைத்துக் கொண்டு இந்தியாவில் தங்கியுள்ள அந்நியர்களுக்கு எதிரானதுதான்'' என்று ஆட்சியிலுள்ளவர்கள் சப்பைக் கட்டுக் கட்டுகின்றனர். ''அப்படிப்பட்டவர்கள் மசூதிகளுக்குள்ளும், முஸ்லீம் வீடுகளிலும் ஒளிந்து கொண்டிருக்கிறார்கள. அங்கு புகுந்து சிவசேனைத் தொண்டர்கள் வெளிக் கொண்டு வருவார்கள்'' என்கிறார் தாக்கரே. இதன் பொருள் போலீசுத் துணையுடன் அவர் ஏவிவிடும் குண்டர்கள் மசூதிகள், இசுலாமியர் வீடுகளுக்குள் புகுந்து தேடுதல் என்கிற பெயரில் உரிமையுடன் தாக்குதல், கொலை, கொள்ளை, கற்பழிப்புகளில் ஈடுபடுவர்.

இந்த உத்திரவைத் தொடர்ந்து தனக்கும், முதல் மந்திரி மனோகர் ஜோஷிக்கும் கொலை மிரட்டல் வந்ததாகவும் மிரட்டியவன் ஒரு வங்கதேசி என்றும் அறிவித்தார் தாக்கரே. இந்தக் கொலை மிரட்டலுக்குப் பதிலடியாக ''என்னுடைய ஒரு மயிரைக் கூட எவனாவது தொட்டால் அவனுடைய சமூகத்தையே சிவசேனா தொண்டர்கள் பூண்டோடு ஒழித்து விடுவார்கள்'' என்று தனது அதிகார பூர்வ பத்திரிகையான ''சாம்னா'' வில் எழுதினார். இதற்கு சிவசேனா - பாரதீய ஜனதா பாசிசப் பரிவாரங்கள் தவிர அனைத்துத் தரப்பும் கண்டனம் தெரிவித்த போதும் தாக்கரேயின் தேசபக்தியையும் துணிவையும் தான் பாராட்டுவதாகவும், அவரது எச்சரிக்கை தேச துரோகிகளுக்கு எதிரானதுதான் என்றும் முதல் மந்திரி நியாயப்படுத்தி வருகிறார். வாஜ்பாயில் இருந்து ஜெயலலிதா வரை பார்ப்பன பாசிஸ்டுகள் அனைவரும் தாக்கரே கும்பலுக்கு ஆதரவாகவே வாய் திறந்துள்ளனர்.

சிவசேனா - பாரதீய ஜனதா கூட்டரசு அதன் சட்டத்துக்குப் புறம்பான அதிகார மையமாகச் செயல்படும் பால்தாக்கரே ஆகியோரின் உத்திரவுகளும் மிரட்டல்களும் ஒரே நோக்கமுடையவைதாம். அது மராட்டிய மாநிலத்தில் இருந்து வேறு பிற இனத்தவர்களையும், மதத்தவர்களையும் பய பீதியூட்டி, தேவையானால் படுகொலைக் கலவரங்கள் நடத்தி வெளியேற்றுவதுதான். கொதிக்கும் எண்ணெய்க் கொப்பரையில் இருந்து தப்பிக்க முயன்று துள்ளிக் குதித்தவன் எரியும் அடுப்பில் வீழ்ந்த சோகமாய் முடிந்துவிட்டது மராட்டிய மாநிலத்தின் கதி. கிரிமினல் மாஃபியா கும்பலுடன் இந்துமதவெறி பாசிசத்துடனும் நயவஞ்சகக் கூட்டுச் சேர்ந்துள்ள காங்கிரசின் கோரப்பிடியிலிருந்து விடுபட சமீபத்திய சட்டமன்றத் தேர்தலில் அக்கட்சியிடமிருந்து பதவியைப் பறித்து சிவசேனா - பாரதீய ஜனாதவிடம் ஒப்படைத்தது மராட்டிய மாநிலம்.

காங்கிரசு மற்றும் சாதிமதச் சார்பின்மைக் கட்சிகளாகக் காட்டிக் கொண்டு வந்தவைகளின் மீது வைத்த நம்பிக்கை மோசம் போனதால், இசுலாமியர், தாழ்த்தப்பட்டவர்களில் கணிசமானோர் கூட ''சாட்சிக்காரன் காலில் விழுவதைவிட சண்டைக்காரன் காலில் விழுவதே மேல்'' என்று கருதி சிவசேனா - பாரதீய ஜனதாவுக்கு ஆதரவு தெரிவித்தனர். வேறு கதி இல்லாத நிலையில், ''கடவுளும் எதிரியும்'' தனக்குக் கருணை காட்டுவார்கள்

படிப்பகம்

www.padippakam.com

என்கிற மாயை ஒருவனுக்கு தற்காலிக மனத் திருப்தியைத் தருகிறது; அதே சமயம் அவனது பரிதாபமான கையறு நிலையைக் காட்டுகிறது. இதுவும், எதிரிக்கு விட்டுக் கொடுத்து சமாதானம் காணும் முயற்சியும், பாசிஸ்டுகளை ஒரு போதும் மனமாற்றம் கொள்ளச் செய்வதில்லை. மாறாக தமது பாசிசக் கொள்கைகளுக்குத் தரப்பட்ட அங்கீகாரமாகவே அவர்கள் கருதுகிறார்கள். அதனால் பாசிஸ்டுகள் மேலும் மூர்க்கமாக தமது பாசிசத் தாக்குதலைத் தொடுக்கிறார்கள். சிவ சேனா - பாரதீய ஜனதாத் தலைவர்கள் தமது பரம்பரை பெருமை பேசி உரிமை கொண்டாடும் பாசிச இட்லரின் காலத்தில் இருந்தே இதுதான் உலகம் கண்ட அனுபவம். அதேபோல பாசிச எதிர்ப்புப் போராளிகளின் வெற்றிகரமான அனுபவம் காட்டுவது என்னவென்றால், பாசிஸ்டுகளுக்கு அவர்களது பாணியிலேயே பதிலடி கொடுப்பதுதான் சரி. சட்டபூர்வ சமாதான வழிகளிலோ, வேண்டுகோள்கள் மூலமாகவோ அவர்களைத் திருத்த முயலுவது வீணான, விபரீதமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடியதே.

எனவே, பொதுவான பாசிச எதிர்ப்புப் போராட்ட - எழுச்சி உணர்வை மக்களிடையே ஏற்படுத்த வேண்டும்; பாசிசத்திற்கு எதிரான அனைத்து உண்மையான சக்திகளையும் ஒரே முகாமில் ஒருங்கிணைக்க வேண்டும்; பாசிசத்துடன் சமரசம் செய்து கொள்ள முயற்சிக்கும் சக்திகளை அம்பலப்படுத்தி முற்றாகத் தனிமைப்படுத்த வேண்டும். இரகசியமான தற்காப்பு - தாக்குதல் குழுக்களைக் கட்டிக் கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட குழுக்கள் இல்லாமல் மக்கள் நம்பிக்கையுடன் அணிதிரள மாட்டார்கள்; அவை இன்றி மக்களைத் திரட்டிப் போராடுவது நிராயுத பாணிகளான மக்களை பாசிச வெறியர்களின் தாக்குதலுக்குப் பலிகொடுப்பதுதான். தக்க தற்காப்பு ஆயுதங்களுடன் திரட்டப்பட்ட மக்கள் திரளைக் கொண்டு, பாசிஸ்டுகள் நடத்தும் பேரணிகள், ''சாகா'' எனப்படும் ஆயுதப் பயிற்சி முகாம்கள், விளக்கு பூஜை - விநாயக சதுர்த்தி போன்ற மதப் போர்வைக்குள் புகுந்து கொண்டு நடத்தும் விழாக்களுக்குள் வலியப் புகுந்து தாக்குதல் தொடுத்து அவற்றைக் கலைக்கவும் பாடம் புகட்டவும் வேண்டும். பாசிசத்தின் சகபாடிகளான அரசு எந்திரத்தின் பாதுகாப்புக்காகக் காத்திருக்கக் கூடாது. அவர்களின் தாக்குதலுக்கு எதிர்த் தாக்குதல் தொடுக்க எப்போதும் தயாராக இருக்க வேண்டும். சமூகப் புறக்கணிப்பு நடத்தி அவர்களின் ஆதரவாளர்களைத் தனிமைப்படுத்த வேண்டும். அரசு, பாசிச பயங்கரவாதத்துக்கு இப்படிப்பட்ட மக்கள் ஜனநாயக, புரட்சிகர சக்திகளின் பயங்கரவாதம் ஒன்றுதான் தக்க பதிலடியாக இருக்க முடியும்.

## நாடு மீண்டும் காலனியாவதைத் தடுப்போம்



**1995, மே 1 சீர்காழி**

## இறால் பண்ணை அழிப்புப் போராட்டம்

*விவசாயிகள் விடுதலை முன்னணி*
*புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி*
*மக்கள் கலை இலக்கியக் கழகம்*
*தமிழ்நாடு*

- வங்கக் கடல்மீன் வல்லரசுக்கு
  கண்ணீர்க் கடலில் மீனவர் குப்பம்.
- களஞ்சியத்தில் கடல் நீரா
  விளை நிலத்தில் இறால் மீனா.
- பன்னாட்டுக் கம்பெனிக்குப்
  பச்சை வயல்கள்
  இந்நாட்டு உழவனுக்குப்
  பிச்சை பாத்திரம்.
- கண்ணை விற்றுச் சித்திரமா?
  மண்ணை விற்று முன்னேற்றமா?.
- போபாலுக்கு விஷ வாயு
  சீர்காழிக்கு இறால் பண்ணை.
- முள்ளில்லாத மீன் அந்நியனுக்கு
  நெல்லில்லாத வயல் விவசாயிக்கு.
- பூம்புகாரைக் கடல் கொண்டது
  இயற்கையின் சீற்றம்
  சீர்காழிக்குள் கடலை இழுப்பது
  மறுகாலனியாக்கம்.
- உழுபவனுக்கு நிலம் சொந்தம்
  மீனவனுக்கு கடல் சொந்தம்!
- விவசாயிக்கு மானிய வெட்டு
  கல்வி, மருத்துவமனைக்கும் பூட்டு
  இறால் விற்றால் டாலர் துட்டு
  எங்களுக்கென்ன லாபம் காட்டு
  பாடாதே அந்நிய செலாவணிப்பாட்டு.
- குடிநீரை உப்பு நீராக்கும்
  இறால் பண்ணைகளை ஒழிப்போம்!
- விளை நிலத்தை உவர் நிலமாக்கும்
  இறால் பண்ணைகளை ஒழிப்போம்!
- இரசாயனக் கழிவுகளால்
  கடல் மீன்களைக் கொல்லும்
  இறால் பண்ணைகளை ஒழிப்போம்!
- விவசாயிகளை வெளியேற்றும்
  இறால் பண்ணைகளை ஒழிப்போம்!
- மீனவர் வாழ்க்கையைப் பறிக்கும்
  இறால் பண்ணைகளை ஒழிப்போம்!
- நாட்டை மீண்டும் காலனியாக்கும்
  இறால் பண்ணைகளை ஒழிப்போம்..!
- இறால் பண்ணைகளால்
  கெடுதல் இல்லை என்று பேசும்
  மணிசங்கர் அய்யரே,
  குடும்பத்துடன் இறால் பண்ணையருகில்
  குடியேறுவாயா?.
- வேண்டும் வேண்டும்
  காவிரித் தண்ணீர்
  வேண்டாம் வேண்டாம்
  இறால் பண்ணை!
- நாட்டை மீண்டும்
  வல்லரசுகளின் காலனியாக
  மாற்றும் பாசிச நரசிம்மராவ் கும்பலைத்
  தூக்கியெறிவோம்!
- புதிய ஜனநாயகப் புரட்சிக்கு
  அணிதிரள்வோம்.



படிப்பகம்

www.padippakam.com

# தாக்கரேயின் ஆசிபெற்ற மணிரத்தினத்தின் பம்பாய்

ரோஜாவுக்கு அத் வானியின் பாராட்டைப் பெற்ற மணிரத்தினம் 'பம்பாய்'க்கு தாக்கரே யின் ஆசியையும் வாழ்த்தையும் பெற்றி ருக்கிறார்.

''மணிரத்தினத்தின் 'பம்பாய்' மிகச் சிறந்த படம். நான் படத்தைப் பார்த்தேன். சில மாற்றங் கள் மட்டும் செய்யச் சொன்னேன் - அவ்வ ளவு தான். பம்பாய் கல வரத்துக்காக நான் வருந்துவது போல ஒரு காட்சி வருகிறது. அது உண்மை யல்ல; நான் எதற்காகவும் வருந்த வில்லை. கலவரத்தை சிவசேனை ஆரம் பிக்கவில்லை. நாங்கள் பதிலடிதான் கொடுத்தோம்... (மற்றப்படி) இது மணி ரத்தினம் உருவாக்கியுள்ள அற்புதமான படம். படத்தை நான் வெகுவாக ரசித் தேன்.''

டைம்ஸ் ஆஃப் இந்தியா (மார்ச்-31) பத்திரிகைக்கு தாக்கரே வழங்கியுள்ள பேட்டி இது.

எந்தவித முன்னறிவிப்பும் இல்லா மல் திட்டமிட்டே திடீரென்று வெளியி டப்பட்ட இந்த படத்தைப் பார்த்தவுட னேயே ம.க.இ.க. சார்பில் ஒரு கண்டன அறிக்கை வெளியிட்டோம். எதிர் பார்த்த படியே அதை எந்தப் பத்திரிக்கையும் பிர சுரிக்கவில்லை. ''சிவசேனாவின் குற்றங் களை மூடிமறைக்கும் பம்பாய் திரைப்ப டத்தைத் தடை செய்'' என்ற முழக்கத்து டன் மார்ச்-19-ஆம் தேதி ம.க.இ.க. வின் சென்னைக் கிளை ஆர்ப்பாட்டம் நடத்தி யது.

இப்போது இந்த இதழ் அச்சேறும் தருணத்தில் தாக்கரேயின் பேட்டி வெளி வந்துள்ளது. ஏதோ தாக்கரேயின் ஆட் சேபத்தால்தான் இந்த 'மதசார்பற்ற காவி யம்' தடைபட்டு நிற்பதாக திட்டமிட்டு உருவாக்கப்பட்ட கருத்து இப்போது நொறுங்கி விட்டது.

முஸ்லீம்களின் எதிர்ப்பு காரணமாக ஐதராபாத்திலும், கர்நாடகத்தின் சில நக ரங்களிலும் போலீசால் தடை செய்யப் பட்டுள்ள இப்படத்தை மீண்டும் வெளி யிட வேண்டும் என மார்க்சிஸ்டு கட்சி யின் ஆந்திர மாநில இளைஞர் அணி கோரியுள்ளது. அதன் கோவைக் கிளையோ படத்திற்கு வரிவிலக்கு தர வேண்டுமெனக் கோருகிறது.

இந்த மசாலாவை 'காலத்தால் அழிக்க முடியாத காவியம்' என்று வரு ணிக்கின்றன பார்ப்பனப் பத்திரிகைகள். அச்சத்துடன் 'லேசாக' விமரிசித்துள்ள சில பத்திரிகைகளும் ஒன்றிரண்டு குறை களை நயமாகச் சுட்டிக் காட்டியுள்ளன, 'மணிரத்தினம் எனும் மாபெரும் கலை ஞன்' நினைத்திருந்தால் நன்றாகச் செய்தி ருக்கலாம் என்று தடவிக் கொடுத்திருக்கி றார்கள் சில படைப்பாளிகள்.

கூஜாக்கள் உருவாக்கியிருக்கும் அலையை நீந்தித் கடந்தால்தான் பம்பா யின் உண்மை முகத்தைக் காண முடியும்.

ரோஜாவைப் போலவே ஒரு திரு நெல்வேலி கிராமத்திலிருந்து துவங்குகி றது கதை. மேலும் கொஞ்சம் தெற்கே தள்ளிப் போய் விவேகானந்தர் பாறையி லிருந்து ஆரம்பித்திருந்தால் இந்திய ஒரு மைப்பாடு முழுமையடைந்திருக்கும்.

மேற்குக் கரையின் கடலும் மலை யும், தோட்டாதரணியின் அட்டை வீடுக ளும் சங்கமிக்கும் தனது திருநெல்வேலி கிராமத்துக்கு பம்பாயிலிருந்து வருகின்



மணிரத்தினத்தின் 'பம்பாய்' மிகச் சிறந்த படம். நான் படத்தைப் பார்த்தேன். சில மாற்றங்கள் மட்டும் செய்யச் சொன்னேன். அவ்வளவுதான். பம்பாய் கலவரத்துக்காக நான் வருந்துவது போல ஒரு காட்சி வருகிறது. அது உண்மையல்ல; நான் எதற்காகவும் வருந்தவில்லை

பால் தாக்கரே.

றான் 'சைவப்பிள்ளை' கதாநாயகன்; எதிர்பாரா மல் வீசிய காற்றில், எதிர் பாராமல் விலகிய பர்தா வினுள் தென்பட்ட கதா நாயகியை, எதிர்பார்த்த படியே காதலிக்கிறான்.

இரு தரப்புப் பெற் றோர்களின் எதிர்ப்பை மீறி நாயகியை பம் பாய்க்கே வரவழைத்து திருமணம் செய்து கொண்டு இரட்டைக் குழந்தைகளையும் பெற் றுக் கொண்டு, மூன்றாவது குழந்தைக் காக 'குச்சி குச்சி ராக்கம்மா' பாடிக் கொண்டிருக்கும் நேரத்தில் இடைஞ்ச லாக பாபர் மசூதி பிரச்சினை குறுக்கிடுகி றது.

ஆனால் பேரப்பிள்ளைகளைப் பார்த்தவுடன் சம்பந்தி சண்டை தீர்கிறது. இருந்தாலும் கலவரத்தில் தீப்பற்றிய வீட் டில் பெற்றோர்கள் கருகிச் சாகின்றனர். பிள்ளைகள் காணாமல் போகின்றனர். பிள்ளைகள் கிடைத்தவுடனே கலவரமும் முடிந்து விடுகிறது. இரு தரப்பு மத வெறி யர்களும் மனம் திருந்தி மனிதச் சங்கிலி யாகக் கைகோர்த்து நிற்க முற்படும் தரு ணத்தில் ரசிகர்கள் 'ஹம்மா... ஹம்மா' என்று பாடிக் கொண்டே அரங்கை விட்டு வெளியேறி விடுகிறார்கள். இதுதான் கதை.

### காதல் என்னும் சல்லாத்துணி கலவரம் எனும் இடையூறு!

பம்பாய் கலவரத்தைச் சித்தரிக்க ஒரு கற்பனைத் திரைக்கதைக்கே அவசி யமில்லை. எல்லா கற்பனைகளையும் விஞ்சும் குரூரங்கள் பல அங்கு உண்மை யில் நடந்திருக்கின்றன.

மணிரத்தினமோ பம்பாயிலிருந்து திருநெல்வேலிக்கு வந்து ஒரு இந்து-முஸ்லீம் காதல் கதையை உருவாக்குகி றார். பெற்றோர்களின் இடையூறையும் சமூகத்தின் இடையூறையும் கடந்து பம் பாய் வந்து சேரும் காதலர்களை நிம்மதி யாக வாழவொட்டாமல் தோன்றுகிறது இன்னொரு இடையூறு-கலவரம். பம் பாய் கலவரத்திற்கு மணிரத்தினம் வழங் கியிருக்கும் அந்தஸ்து இதுதான்.

"Why me? என்பதுதான் படம் எழுப் பும் கேள்வி'' என்று ஒரு பேட்டியில் கூறி யுள்ளார் மணிரத்தினம். ''எவனோ அடித்துக் கொள்ள நாங்கள் ஏன் சாக வேண்டும்?'' என்பதே இதன் பொருள். சமூக விரோதத் தன்மை கொண்ட, அரு வெறுக்கத்தக்க காரியவாதிகளான நடுத்த ரவர்க்கத்தின் குரல் இது. பேருந்து தடை பட்டு நிற்பதற்குக் காரணம் ஜெயலலிதா வின் பவனியானாலும் பீடித் தொழிலா ளர் ஊர்வலமானாலும் அவற்றை சம

படிப்பகம்

www.padippakam.com

மான வெறுப்புடன் நோக்கும் நடுத்தர வர்க்கத்தின் பார்வை இது.

வேறு வடிவங்களில் எளிதில் அம்பலப்பட்டுப் போகக்கூடிய இந்த கயமைத் தனம், காதல் என்ற சல்லாத்துணியைப் போர்த்தியவுடன் கவுரவம் பெறுகிறது. அமர வகைப்பட்டதாக இருந்தாலும் காதல் என்பது அதன் தன்மையிலேயே சமூகத்திலிருந்து விலகியதுதான். ஒதுங்கும் போக்கைத் தன் தத்துவமாகக் கொண்டிருக்கும் நடுத்தரவர்க்கம், காதல் வயப்படும்போது கள் குடித்த குரங்காகி விடுகிறது.

வரவிருக்கும் கலவரத்தின் குரூரத்தை ரசிகர்களுக்குப் புரியவைக்க, இயக்குனருக்குத் தெரிந்த ஒரே வழி, காதலின் ஆழத்தை அதிகப்படுத்துவது தான். ஆழம் என்றவுடன் கடல் நினைவுக்கு வரவே அங்கே ஓடுகிறார் இயக்குனர்.

ஆனால் மலையின் கம்பீரமும் கடலின் ஆழமும் காதலின் அற்பத்தனத்தை மேலும் அதிகமாக்கிக் காட்டுகின்றன. கடற்கரையில் காத்திருக்கும் காதலனைத் தேடி ஓடிவரும் காதலியின் குலுங்குகின்ற மார்புகளை ரசிகர்களின் பார்வைக்கு சமர்ப்பிக்கிறார் 'கலைஞர்' மணிரத்தினம். திரையரங்கில் காத்திருக்கும் காதலர்கள் உடனே விசிலடிக்கிறார்கள். திரைக்காதல், அரங்க விபச்சாரமாக நிறைவு பெறுகிறது.

பர்தாவுக்குள் புகுந்து கொண்டு காதலியைத் துரத்துவது, கையைக் கீறிக் கொண்டு 'ரத்தம் சேரும்' என்று வசனம் பேசுவது, காதலி சம்மதம் தெரிவித்து விட்ட பின்னரும் பாறைமேல் நின்று கொண்டு 'உயிரே.. உயிரே' என்று ஒரு தலைராகம் பாடுவது.. இன்னபிறவெல்லாம் பிற இயக்குனர்கள் செய்தால் மசாலா. மணிரத்தினம் செய்தால் உன்னதம் என்பது விகடன் வகையறாவின் அளவுகோல்.

''கலவரக் காட்சிகளை நிதானமாகக் காட்ட வேண்டுமென்பதற்காக காதலை 'படு ஸ்பீடாக'க் கொண்டு போகிறார்'' என்கிறது விகடன். உண்மைதான். பெற்றோரை உற்றாரை விட்டுத் தனியாக ரயிலேறி வந்திறங்கி, காதலனைக் கண்டு கண்கலங்கும் காதலியிடம், 'போய் கல்யாணம் பண்ணிக்கலாமா' என்று நேரே விசயத்துக்கு வரும் காதலனின் வசனமும், அதைச் சொல்லுகின்ற தொனியும் ஜேம்ஸ்பாண்டின் காதல்களை நினைவூட்டுகின்றன. ரொம்ப வேகம்தான்!

**கதாநாயகன் முஸ்லீமாக இருந்திருந்தால்...**

''ஒரு முஸ்லீம் பெண்ணை இந்துப் பையன் காதலிப்பதா என்று சில முஸ்லீம் தலைவர்கள் ஆட்சேபிக்கிறார்கள். இது சிறுபிள்ளைத்தனமானது'' என்று ரொம்பப் பெருந்தன்மையாகப் பேசியிருக்கிறார் தாக்கரே. கதாநாயகன் முஸ்லீமாகவும் கதாநாயகி இந்துவாகவும் இருந்திருந்தால்? தாக்கரேயின் பெருந்தன்மையை அப்போதல்லவா பார்க்க வேண்டும்.

> ''மலையின் கம்பீரமும் கடலின் ஆழமும் காதலின் அற்பத்தனத்தை மேலும் அதிகமாக்கிக் காட்டுகின்றன. கடற்கரையில் காத்திருக்கும் காதலனைத் தேடி ஓடிவரும் காதலியின் குலுங்குகின்ற மார்புகளை ரசிகர்களின் பார்வைக்கு சமர்ப்பிக்கிறார் 'கலைஞர்' மணிரத்தினம். திரையரங்கில் காத்திருக்கும் காதலர்கள் உடனே விசிலடிக்கிறார்கள். திரைக்காதல், அரங்க விபச்சாரமாக நிறைவு பெறுகிறது.

ஆட்சியதிகாரத்திலிருந்த முகலாய மன்னர்கள் இராஜபுத்திரப் பெண்களை மணந்து கொண்டதை 'இந்து பெருமிதத்துக்கு' நேர்ந்த இழுக்காகக் கருதுகிறார்கள் ஆர்.எஸ்.எஸ்.காரர்கள். தற்போது அரசியல் சமூக அரங்குகளில் இந்து மதவெறியர்களால் நசுக்கப்படும் முஸ்லீம்கள் இவ்வாறு கருதுவதில் வியப்பில்லை.

பெண்கள் மீதான தந்தைவழி ஆதிக்கத்தை எதிர்க்கின்ற அதே நேரத்தில், மதம் மீறிய திருமணங்களை ஆதரிக்கின்ற அதே நேரத்தில், பம்பாயின் கதாநாயகன் இந்துவாக இருப்பது ஆணாதிக்கம் + இந்து ஆதிக்கத்தின் வெளிப்பாடே என்பதையும், படத்தின் இந்து மதவெறிச் சார்புடன் இது இணைந்து போவதையும் நாம் கணக்கில் கொள்ள வேண்டும். கதாநாயகனை ஒரு முஸ்லீமாக வைத்துக் கற்பனை செய்து பாருங்கள். கலவரத்தின் முதல் காட்சியிலேயே அவன் கொல்லப்பட்டிருப்பான். இடைவேளையுடன் படமே முடிந்திருக்கும். (உருது பத்திரிகையாசிரியர்களும், முஸ்லீம் பத்திரிகையாளர்களும் கலவரத்தில் சந்தித்த நிலைமை இதுதான்)

காதலின் ஊடாகவும் அதன் தொடர்ச்சியாகவும் கலவரம் சித்தரிக்கப்படுவதால், மதம் மீறிய திருமணத்தை மறுக்கும் பழமைவாத இந்து-முஸ்லீம் பெற்றோர்களின் பரிணாம வளர்ச்சியாகத் தோற்றம் தருகிறது மதவெறி. பம்பாய்க் கலவரத்தை முன் நின்று நடத்திய இந்து மதவெறியர்களுக்குச் சமமாக முஸ்லீம்களையும் குற்றம் சாட்டுவதற்கு வசதியான அஸ்திவாரமாகவும் இந்தக் காதல் பயன்படுகிறது.

> நூற்றுக்கணக்கான முஸ்லீம் உயிர்களைக் காவு கொண்ட ரதயாத்திரை திரையில் அமைதியாகப் போகிறது. அப்போது தெருவில் நிற்கும் கதாநாயகியின் முகத்தில் 'அநாவசியமாக' கலவரம் படர்ந்தாலும், ஊர்வலத்தில் போகின்ற 'எழுச்சி பெற்ற ஹிந்துக்கள்' அவளை லேசாக சீண்டிக் கூடப் பார்க்காமல் ஆர்.எஸ்.எஸுக்கே உரிய 'கட்டுப்பாட்டுடன்' செல்கின்றனர் எனில், அத்வானியின் டொயோட்டோ ரதச் சக்கரங்களில் நசுங்கியவை முஸ்லீம் தலைகளா, எலுமிச்சங் காய்களா?

மதம் மீறிய காதலை மறுக்கும் மதப் பண்பாட்டிலிருந்து மதவெறி தோன்றுவதில்லை; மதம் மீறிய திருமணங்கள் மட்டுமே அதை ஒழிக்கப் போவதுமில்லை. மதவெறியின் பின்னணியில் இருப்பது அரசியல். அந்த வகையில் பம்பாய் கலவரத்தைத் தூண்டிய அரசியல் சக்திகள் யார், அந்த அரசியலைப் பற்றித் தனது கருத்து என்ன என்பதை இயக்குனர் சொல்ல வேண்டும்.

**ஏன் என்ற கேள்விக்கு என்ன விடை?**

அதைச் சொல்லக்கூடாது என்பதில் வெகு கவனமாக இருக்கிறார் இயக்குனர். ''அயோத்தி கோயில்கட்ட காசு கொடு'' என்று வீட்டுக்கு வந்து கேட்கிறார்கள் இந்துமதவெறியர்கள். அதிர்ந்து பின்வாங்குகிறாள் கதாநாயகி. கதாநாயகன் உடனே அவர்களை வெளியே தள்ளிக் கொண்டு போகிறான். தள்ளிக் கொண்டு போய் மனைவி கண்ணில் படாமல் காசு கொடுத்தாரா? மசூதியை இடிப்பது அநீதி என்று வாதாடினாரா? தெரியாது. உடனே வேறு காட்சிக்கு மாறுகிறார் மணிரத்தினம்.

நடுவீதியில் நின்று ஊருக்கு உபதேசம் செய்யும் கதாநாயகனை, அந்தக் காட்சியில் மணிரத்தினம் ஊமையாக்கியது ஏன்? மசூதியை இடிப்பது குற்றம் என்ற ஒரு வார்த்தையைக் கூட வெளிப்படையாகச் சொல்ல முடியாமல் வேறு எதைப் பிடுங்குவதற்கு இந்தப் படம்?

தன் பெற்றோரை இழிவு படுத்தும் மாமனாரின் கடிதத்தைக் கண்டு சீறும் கதாநாயகி, தன் மதத்தினர் புழு பூச்சிகளைப் போலக் கொல்லப்படுவது ஏன் என்று ஒரு கேள்வியை மட்டும் கணவனிடம் கேட்கவில்லை.

வீடு எரிகிறது; பெற்றோர்கள் எரிகிறார்கள்; பிள்ளைகள் காணாமல் போகின்றனர்; ஊரே எரிகிறது. ஆனால் அந்த உத்தம பத்தினியோ (கதாநாயகி) ''ஏன் இந்தக் கலவரம்?'' என்ற ஒரு கேள்வியை மட்டும் தன் காதல் கணவனிடம் கேட்கவேயில்லை. ஒரு வேளை அவ்வாறு கேட்பது இந்தக் கலைக் காவியத்தின் யதார்த்தச் சித்தரிப்பைக் குலைத்து பிரச்சார நெடியேற்றியிருக்குமோ?

கற்பழிப்பு, கொலை, கொள்ளை, விலைவாசி ஏற்றம் ஆகிய பிரச்சினை



படிப்பகம்

www.padippakam.com

கள் குறித்து அங்கலாய்க்கலாம், ஆனால் ஆராயக்கூடாது என்ற நடுத்தரவர்க்கத்தின் உயர்ந்த மரபு அப்படியொரு கேள்வியைக் கதாநாயகி கேட்பதால் சிதைந்துவிடும் என்ற அச்சமோ? அல்லது இந்தக் கேள்வி காதல் தம்பதிக்கிடையிலேயே கலவரத்தைத் தோற்றுவிக்கக்கூடும் என்ற நடுக்கமா?

இந்தப் பிரச்சினை மணிரத்தினத்துக்கும் புரியாமல் இல்லை. 'ஏன்' என்ற கேள்வியைக் கேட்கவேண்டும். ஆனால் அதற்குப் பதில் சொல்லக்கூடாது. என்ன செய்யலாம்? கதாநாயகனை ஏதாவது ஒரு பாறையிலோ, மொட்டை மாடியிலோ ஏற்றிவிட்டு ''ஏன்... ஏன்'' என்று கேட்க வைத்து பதில் சொல்லும் பொறுப்பை எதிரொலியிடம் விட்டுவிடலாம். அல்லது சாமி படத்தின் முன்னால் நின்றும் கேட்கலாம். இதெல்லாம் பழைய உத்திகள். ஹாலிவுட்டுக்கு டிக்கெட் ரிசர்வ் செய்திருக்கும் புதுமை இயக்குனருக்கு ஒத்துவராதவை.

**காரணம் புரியவில்லையாம் இயக்குனருக்கு!**

இங்கேதான் முத்திரை பதிக்கிறார் மணிரத்தினம். 'ஏன்' என்று குழந்தையின் வாயால் கேட்க வைத்து ஒரு அலியின் வாயால் 'தெரியவில்லை' என்று பதில் சொல்கிறார். 'அலித்தனத்திற்கு' ஒரு தத்துவ விளக்கம் வேறு. தன்னுடைய மதம் இன்னதென்று சொல்லத் தெரியாத சிறுவனின் இரண்டுங்கெட்டான் நிலையும், அலியின் இரண்டுங்கெட்ட நிலையும் சந்திக்கும் குறியீடாம் இது.

சிறுவனைக் காப்பாற்றுபவன் இந்துவா முஸ்லீமா என்ற வம்பில் சிக்கிக் கொள்ளாமலிருக்கக் கண்டுபிடித்த பேடித்தனமான உபாயத்திற்கும் ஒரு கோட்பாட்டு விளக்கம்! சுக்குமி - ளகுதி - ப்பிலி என்று உளறினாலும் அதற்கு ஒரு பொழிப்புரை போட பார்ப்பன உரையாசிரியர்கள் இருக்கும்போது மணிரத்தினத்துக்கு என்ன கவலை?

குற்றவாளி யார் என்ற கேள்விக்கு வசனத்தில் பதில் சொல்ல வேண்டிய இடங்களிலெல்லாம் வாயை மூடிக் கொண்ட மணிரத்தினம், கலவரக் காட்சிகளின் சித்தரிப்பில் தன் கைவரிசையைக் காட்டுகிறார்.

**அமைதியான ரதயாத்திரை கலவரம் செய்யும் முஸ்லீம்கள்!**

நூற்றுக்கணக்காக முஸ்லீம் உயிர்களைக் காவுகொண்ட ரதயாத்திரை திரையில் அமைதியாகப் போகிறது. அப்போது தெருவில் நிற்கும் கதாநாயகியின் முகத்தில் 'அநாவசியமாக' கலவரம் படர்ந்தாலும், ஊர்வலத்தில் போகின்ற 'எழுச்சி பெற்ற ஹிந்துக்கள்' அவளை லேசாக சீண்டிக் கூடப் பார்க்காமல் ஆர்.எஸ்.எஸ்ஸுக்கே உரிய 'கட்டுப்பாட்டுடன்' செல்கின்றனர். எனில், அத்வானியின் டோயோட்டோ ரதச் சக்கரங்களில் நசுங்கியவை முஸ்லீம் தலைகளா, எலுமிச்சங்காய்களா?.

'பாபர் மசூதி இடிப்பு' என்ற மிருகத்தனமான கொலைவெறியாட்டமோ, உணர்ச்சியற்ற தலைப்புச் செய்திகளாக ஓடுகிறது. (உடன்பிறப்பே, முரசொலியையும் காட்டுகிறாரே மணிரத்தினம் - அதற்குப் பெயர்தான் பார்ப்பன நரித்தனம்)

'யா அல்லா' என்ற பெருங்கூச்சலுடன் திரை உயிர்பெறுகிறது. வெறிகொண்ட முஸ்லீம்கள் கடைகளைத் தாக்குகின்றனர்; போலீசைத் தாக்குகின்றனர்; **கலவரக்காட்சி** முதன்முதலாக திரையில் துவங்கும்போது இப்படித்தான் துவங்குகிறது.

பம்பாய் உள்ளிட்டு நாடு முழுவதும் நடந்த முஸ்லீம் எதிர்ப்புக் கலவரங்களின் மூலகாரணமான பாபர் மசூதி விவகாரத்தை, 'குழந்தையாயிருந்த கதாநாயகன் வாலிபனாகிவிட்டான் என்று சக்கரத்தைச் சுழற்றிவிட்டுக் காட்டுவது போல் ஓடவிடுவதன் மூலம் டிசம்பர் - 6-க்கு முன்னால் இந்துமதவெறியர்கள் திட்டமிட்டு நடத்திய காலித்தனங்களையெல்லாம் தனது கத்தரிக்கோலால் எடிட் செய்துவிடுகிறார் மணிரத்தினம்.

காட்சிகளைத் தொகுத்துத் தருகின்ற முறையில், கலவரத்தைத் துவங்கிய குற்றம் முஸ்லீம்களின் மீது சுமத்தப்படுகிறது. கலவரத்தைச் சித்தரிப்பதில் கூட, திரும்பத் திரும்ப வருகின்ற 'கும்பல்கள் மோதும்' காட்சிகளில்தான் இந்து மதவெறியர்களின் தாக்குதல் காட்டப்படுகிறது.

ஆனால் மனதில் பதியத்தக்க குறிப்பான வன்முறை நடவடிக்கைகளிலும், நெருக்கமான குளோசப் காட்சிகளிலும் முஸ்லீம்கள் நடத்தும் தாக்குதல் காட்டப்படுகிறது. மனதில் பதியக்கூடிய கலவரம் பற்றிய காட்சிப் படிமங்களை ஒப்பீடு செய்து பார்த்தால் அவற்றில் 80 சதவீதம் முஸ்லீம்களையே குற்றவாளிகளாக்குகின்றன.

ஜனவரி - 5ம் தேதி இரண்டு சுமை தூக்கும் தொழிலாளர்கள் கொலை செய்யப்பட்ட செய்தி படத்துடன் காட்டப்படுகிறது. தொழிற்சங்கத் தகராறில் நடந்த கொலைக்கு மதச் சாயம் பூசி, பத்திரிகையில் தலையங்கம் எழுதி படுகொலையைத் துவக்கிய சிவசேனாதான் என்று காட்டப்படுவதில்லை. மசூதி இடிப்பிற்குப் பின் முஸ்லீம்கள் தான் கலவரம் செய்தார்கள் என்று காட்டிய மணிரத்தினம் ஜனவரி-6 மதேதி 'சாம்னா' பத்திரிகையில் தலையங்கம் எழுதி அதிகார்ஹூர்வமாகக் கலவரத்தைத் துவக்கிய தாக்கரே

## சினிமா 'ஞானி' மணிரத்தினம்

ஃபிலிம் பேர் இதழுக்கு அளித்த பேட்டியொன்றில் 'விமரிசகர்களுக்கு சினிமா ஞானம் இல்லை' என்று சாடியிருக்கிறார் மணிரத்தினம். அது சரிதான். அர்சத் மேத்தாவின் திருட்டை விமரிசிப்பவர்களுக்கெல்லாம், அர்சத் மேத்தாவைப் போன்ற பங்கு மார்க்கெட் ஞானம் எப்படி இருக்க முடியும்?

ஆனால் நமக்குத் தெரிந்தவரை சார்லி சாப்லின் கொஞ்சம் சினிமா ஞானம் உள்ளவர். ஹிட்லரை அம்பலப்படுத்தி அவர் எடுத்த தி கிரேட் டிக்டேட்டர் எனும் திரைப்படத்தின் இறுதிக் காட்சியில், வசனமில்லாத சினிமாவுக்குப் புகழ்பெற்ற சாப்லின், பாசிசத்துக்கெதிரான நீண்ட பிரசங்கத்தை வைத்தார். சினிமா என்ற கலையை சரியாகப் புரிந்து கொள்ள முடியாத 'முட்டாள்' ரசிகர்களுக்கும் தனது பாசிச எதிர்ப்புப் பிரகடனம் தெளிவாகப் போய்ச் சேர வேண்டும் என்பதற்காக.

அதுபோல இன்று மதவெறியைப் பற்றி பேசுகின்ற எவனொருவனும் இந்துமதவெறியைப் பற்றிக் குறிப்பாக தன் கருத்தை சொல்லியாக வேண்டும். ''மசூதியை இடித்ததற்கு என்ன சொல்லுகிறீர்கள்?'' என்று கேட்டால் ''ஈசுவர அல்லா தேரே நாம்'' என்கிறார் மணிரத்தினம். ஆனால் ஒரு இடத்தில் மட்டும் நறுக்கான வசனம் வருகிறது. ஊடல் கொண்ட முஸ்லீம் மனைவியிடம் ''மதம் மாறுவா?'' என்று சம்பந்தமில்லாமல் கேட்கிறார் கதாநாயகன். தனக்கும் பாரதிய ஜனதாவுக்கும் உள்ள சம்பந்தத்தை அந்த இடத்தில் தெளிவாகச் சொல்லிவிட்டார் இயக்குனர்.



படிப்பகம்

www.padippakam.com

யைக் குற்றம் சாட்டவில்லை என்பது கவனிக்கத்தக்கது. மாறாக இரு தரப்பினருமே மோதிக் கொள்வதாகக் காட்டுகிறார்.

**முஸ்லீம்களிடம் அடிவாங்கும் போலீசு!**

பம்பாய் போலீசு சிவசேனாவின் அடியாள் படையாகச் செயல்பட்டது எனக் குற்றம் சாட்டினார் வழக்கறிஞர் பல்கிவாலா. போலீசு துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டவர்களில் 80% பேர் முஸ்லீம்கள்.

ஆனால் மணிரத்தினம் காட்டும் கலவரக்காட்சிகளில் முஸ்லீம்கள் போலீசைத் தாக்குகிறார்கள். ஒரு வண்டிக்குத் தீ வைத்து போலீசின் மேல் தள்ளி விடுகிறார்கள். உண்மையில் இவ்வாறு நடைபெற்றிருக்கக்கூடிய ஒன்றிரண்டு சம்பவங்கள் கூட, நரவேட்டையாடிய போலீசிடமிருந்து தங்களைத் தற்காத்துக் கொள்ள முஸ்லீம்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள்தான். ஆனால் தற்காப்பு நிலையில் போலீசு இருந்ததாக கீழ்க்கண்ட காட்சி மூலம் கூறுகிறார் இயக்குனர்.

''செத்தவர்களில் 35 பேர் அப்பாவிகளாயிற்றே. ஏன் முழங்காலுக்கு மேல் சுட்டீர்கள்? '' என்று கதாநாயகன் போலீசு அதிகாரியைக் கேட்கிறான். ''எங்களையே கொல்ல வரும் கூட்டத்திலிருந்து (அதாவது முஸ்லீம்களிடமிருந்து) நாங்கள் தற்காத்துக் கொள்வது எப்படி? இந்தத் தொழிலின் மீது உங்களுக்கு மரியாதையே இல்லையா?'' என்று மடக்குகிறார் போலீசு அதிகாரி. உடனே 'என் குழந்தைகளைக் காப்பாற்றிய தெய்வமே!'' என்று போலீசின் காலில் விழுகிறார் நிருபரான கதாநாயகன். மணிரத்தினத்திற்குள் ஒளிந்திருக்கும் 'சோ' ராமசாமி வெளியே வரும் காட்சி இது.

**அப்பாவி இந்துவின் அவலம்!**

தூரத்தில் முஸ்லீம் மத வெறியர்கள் வருவதைக் கண்ட பேரன் தாத்தாவின் நெற்றிப் பொட்டை அழிக்கிறான். தாத்தா பேரன் சென்டிமென்டில் உருகிய ரசிகர்கள் இச்சுக் கொட்டுகிறார்கள். இந்து நாட்டில் ஒரு வயதான அப்பாவி **'இந்துவின் அவலம்'** அழுத்தமாகச் சித்தரிக்கப்பட்டுவிட்டது. இந்த அவலத்தின் வலிமையில் அவரைக் காப்பாற்றிய முஸ்லீமின் (கதாநாயகியின் தந்தை) கருணை காணாமல் போய்விடுகிறது.

பிறிதொரு காட்சியில், தீப்பிடித்து எரியும் வீட்டிலிருந்து கதாநாயகியின் பெற்றோரை (சம்பந்தியைக்) காப்பாற்றிவிட்டு, தன் உயிருக்கும் அஞ்சாமல் அவருடைய குர்ஆன் நூலை கதாநாயகனின் தந்தை (இந்து) பத்திரமாக எடுத்துச் செல்லும் போது **'இந்துவின் பெருந்தன்மை'** நிலைநாட்டப் படுகிறது. அரங்கத்தில் கைதட்டல்.

தனது மதச்சின்னத்தைக் கூட நெற்றியில் வைத்துக் கொள்ள அனுமதிக்காத முஸ்லீம்களின் வெறி! அவர்களது மத நூலையும் காப்பாற்றும் இந்துவின் பெருந்தன்மை!

திரையில் அடுத்தடுத்து இந்தக் காட்சிகள் வரவில்லை. எனினும் ரசிகனின் மனத்தில் இவை அக்கம் பக்கமாக நிற்கும்.

மசூதிக்குள்ளே புகுந்து மவுல்வியையும், தஞ்சமடைந்திருந்த அப்பாவி முஸ்லீம்களையும் வேட்டையாடிய சிவசேனா'இந்து'க்களின் கொலைவெறி? அந்த உண்மைச் செய்தியை பழையபேப்பர் கடையில்தான் தேடிப்பார்க்க வேண்டும்.



பெரம்பாடா குடிசைப் பகுதி சிவசேனா குண்டர்களால் தீ வைக்கப்படுகிறது

**முஸ்லீம் கொள்ளி வைக்கிறான் எரிகிறது இந்துவின் வீடு**

முஸ்லீம்கள் அதிகமாக வாழும் பெராம்பாடா என்ற குடிசைப்பகுதியைச் சுற்றியுள்ள அடுக்குமாடிக் கட்டிடங்களின் மேலிருந்து தீப்பந்தங்களையும் பெட்ரோல் குண்டுகளையும் எறிந்து அந்தச் சேரியையே சாம்பலாக்கினர் சிவசேனா குண்டர்கள்.

மசூதிக்குள் நுழைந்து மௌல்வியைக் கொன்றனர். முஸ்லீம் ராணுவச் சிப்பாய் ஒருவரின் வீட்டுக்கூரையைப் பிரித்து கொள்ளையடித்து தீவைத்தனர். உயிருடன் எரிக்கப்பட்ட 17 முஸ்லீம்களின் படத்தை தனது பத்திரிகையில் வெளியிட்டு மகிழ்ந்தார் தாக்கரே.

ஆனால் மணிரத்தினமோ ஜோகேஸ்வரி என்ற பகுதியில் ஒரு இந்துவின் வீடு கொளுத்தப்பட்ட விதிவிலக்கான சம்பவத்தைத் தேடிப்பிடிக்கிறார். இந்து வீடென்று தெரியாமல் போய்விடுமோ என்பதற்காக கதவில் ஸ்வஸ்திக் சின்னம் வரையப்பட்டிருக்கிறது. காமெரா அதை நெருக்கமாகக் காண்பிக்கிறது. பிறகு முஸ்லீம்கள் அதை வெளிப்புறமாகத் தாளிடுவதையும் வீட்டுக்குத் தீ வைப்பதையும் நிதானமாகப் படம் பிடிக்கிறது. இச்செயலின் குரூரத்தை உணர்த்த இதுவும் போதாது என்று கருதும் மணிரத்தினம், தீப்பிடித்த வீட்டிற்குள் அகப்பட்டுக் கொண்ட ஒரு ஊனமுற்ற சிறுமியின் தவிப்பையும் காட்டி 'இந்து' ரசிகர்களின் கோபத்தை விசிறிவிடுகிறார்.

கதாநாயகனின் குழந்தைகளை மண்ணெண்ணெய் ஊற்றிக் கொளுத்த முயலும் கும்பல் ''சொல் நீ இந்துவா முஸ்லீமா'' என்று திரும்பத் திரும்பக் கேட்கிறது. ஆனால் 'நான் இந்து' என்று சொன்னவர்கள் யாரையும் விட்டுவிடவில்லை சிவசேனா குண்டர்கள். உள்ளாடையைக் களைந்து சுன்னத் செய்திருக்கிறானா என்று பார்த்துப் பார்த்துக் கொன்றார்கள். அநாதை இல்லத்தில் இருக்கும் குழந்தைகளையும் அவர்கள் விட்டுவைக்கவில்லை. ஆனால் மணிரத்தினம் அந்தக் கொலைகாரர்களின் மத அடையாளம் தெரியாமல் பார்த்துக் கொள்கிறார்.

இன்னும் ஏராளமான காட்சிகள். காவல் துறையிடம் மனுக் கொடுக்கும் பாதிக்கப்பட்ட மக்களின் கூட்டத்தில் முஸ்லீம்கள் அரிதாகவே தென்படுகிறார்கள். பிணவறையில் கிடக்கும் பிணங்களிலும் அப்படியே. (பிணத்துக்கும் மதமா என்று மணிரத்தினம் தத்துவம் பேசலாம்).

முஸ்லீம்கள் மீது இந்து வெறியர்கள் தாக்குதல் நடத்தும் காட்சிகளும் இருக்கின்றன. ஒரு குடியிருப்பில் புகுந்து தாக்குவது, காருக்குள் தப்பிச் செல்பவர்களைக் கொளுத்துவது போன்ற சில காட்சிகளே அவை. அவையெதற்கும் **காட்சி முக்கியத்துவம்** தரப்படவில்லை. மேலும் இந்து மதம் சார்ந்த பெரும்பான்மை ரசிகர்களின் மனதில் இந்துமத



படிப்பகம்

www.padippakam.com

வெறிக்கு எதிரான கோபத்தையும் வெறுப்பையும் தோற்றுவிக்கத்தக்க காட்சிகள் எதுவும் படத்தில் கிடையாது.

**யா அல்லா...**
**கோயபல்ஸ் தோற்றான்!**

கோயபல்ஸ் வேலையின் சிகரமாக வருகிறது கடைசிக் காட்சி. இந்து வெறியர்களை இந்துக்களும், முஸ்லீம் வெறியர்களை முஸ்லீம்களுமே எதிர்த்துவிரட்டுகிறார்கள். இந்து மதவெறித் தலைவரின் (தாக்கரே) கார் வருகிறது. பிணக்காடாகக் காட்சியளிக்கும் தெருவைப் பார்த்து மேல்துண்டால் மூக்கைப் பொத்துகிறார். லேசான துயரம் அவர் முகத்தில் தோன்றி மறைகிறது.

அடுத்து அழுகுரல் ஒலிக்கும் ஒரு தெருவிற்குள் முஸ்லீம் மதவெறித் தலைவர் இறங்கி நடக்கிறார். காயம் பட்டுக் கிடக்கும் ஒரு பிஞ்சுக் குழந்தையைப் பார்த்தவுடன் 'யா அல்லா' என்று கதறுகிறார். உடனே **'போதும் போதும்'** (பஸ், பஸ்) என்று தன் கையை உயர்த்துகிறார்.

முதல் காட்சியில் 'யா அல்லா' என்ற கோபக்குரலுடன் முஸ்லீம்கள் கலவரத்தைத் துவக்குகிறார்கள். இறுதிக்காட்சியில் 'யா அல்லா' என்ற வருத்தம் தோய்ந்த குரலுடன் கலவரத்தை நிறுத்திக் கொள்ளுமாறு தன் ஆட்களுக்கு ஆணையிடுகிறார் முஸ்லீம் மதவெறித் தலைவர்.

கலவரத்துக்குக் காரணமானவர்களே தவறை உணர்ந்து கலவரத்தை முடித்துக் கொள்கிறார்களாம் - இதுதான் மணிரத்தினம் காட்டும் பம்பாய்.

''அடுத்து வருகின்ற சில நாட்கள் நம்முடையவை'' என்று தனது பத்திரிகையான சாம்னாவில் தலையங்கம் எழுதி கலவரத்தை அதிகார பூர்வமாகத் துவக்கி வைத்ததும், 'போதும், வெறியர்களுக்கு (முஸ்லீம்களுக்கு) உரிய இடத்தை நீங்கள் காட்டிவிட்டீர்கள்'' என்று எழுதி அதிகாரபூர்வமாகக் கலவரத்தை முடித்து வைத்ததும் தாக்கரேதான். ஆனால் இரண்டே காட்சிகள் மூலம் தாக்கரேயின் குற்றத்தை முஸ்லீம்களின் தோள்களுக்கு மாற்றிவிட்டார் மணிரத்தினம். அதற்காகத்தானே தாக்கரேயின் பாராட்டு!

காட்சிகளின் தொகுப்பு மதச்சார்பின்மை போல ஒரு மாயத்தோற்றம் காட்டுகிறது. தனித்தனியான காட்சிப் படிமங்களோ முஸ்லீம்களை எதிர்த்து முழக்கமிடுகின்றன. 'பம்பாய்' - நரசிம்மராவின் கூலத்தோற்றம்.

**ரகுமானின் இசை**
**ஜாடிக்கேற்ற மூடி**

படத்தில் இசையமைப்பைப் பற்றிக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. 'திகிலூட்டும் இசை' என்று விகடனும், 'கிளர்ச்சியூட்டும் இசை' என்று 'இந்து'வும் ரகுமானின் இசையைப் புகழ்ந்துள்ளன.

> ''நான் இந்து என்று சொன்னவுடன் யாரையும் விட்டுவிடவில்லை சிவசேனா குண்டர்கள். உள்ளாடையைக் களைந்து சுன்னத் செய்திருக்கிறானா என்று பார்த்துக் கொன்றார்கள். அநாதை இல்லத்தில் இருக்கும் குழந்தைகளையும் அவர்கள் விட்டு வைக்கவில்லை. ஆனால் மணிரத்தினம் அந்தக் கொலைகாரர்களின் மத அடையாளம் தெரியாமல் பார்த்துக் கொள்கிறார்.''

இரண்டுமே உண்மை.

கொடூரத்தைத் திகிலாகவும், இன்பத்தைக் கிளர்ச்சியாகவும் மாற்றுகின்ற அமெரிக்க மரபை அப்படியே பின்பற்றியிருக்கிறார் ரகுமான். ஆனால் கதாநாயகி பிரசவ வேதனையில் துடிக்கும் போது பின்னணியில் ஒலிக்கும் 'திகிலூட்டும் இசை'க்குத்தான் பொருள் புரியவில்லை. பிறக்கப்போவது பிசாசோ, சைத்தானோ என்ற அச்சத்தை உருவாக்குகிறது. காதல் காட்சிகளில் அதே கூண்டுவண்டி, அதே கும்பல் நடனம், அதே இசை.

மொத்தப்படத்தின் மைய உணர்ச்சியைச் சித்தரிக்கும் இசை (Theme Music) காதலையும், காதலரின் சோகத்தையும் விவரிக்கிறது. (அப்புறமென்ன, அதுதானே படத்தின் உள்ளடக்கம்!) ஆனால் இந்துஸ்தானியின் குழைவில் சைவப்பிள்ளையின் 'தேவார உருக்கம்' காணாமல் போய்விடுகிறதே! இந்துக்களின் தோல்வி. வெட்கம்... வெட்கம்!

காதலின் இனிமையில் குறுக்கிட்டு மிதிக்கும் திம்திம் என்ற வலிமையான தாளமும் 'ஹோ' என்ற ஆண்குரலின் ஓலமும் கலவரத்தைச் சுட்டுவதற்கோ? மதவெறியைச் சித்தரிக்க ஓவியர் மதன் வரைகின்ற மத அடையாளம் இல்லாத சிம்பன்சி குரங்கைத்தான் ரகுமானின் 'கலவர இசை' நினைவுபடுத்துகிறது. முஸ்லீம் மக்களின் ஈரல் குலையை அறுப்பது போன்ற குரூரத்துடன் நாடெங்கும் ஒலித்த 'ஜெய் சியாராம்' என்ற கோஷமும் கொலைக்கருவிகளாக மாறிய பஜனை வாத்தியக் கருவிகளும் அல்லவா இந்த மதவெறிப் பயங்கரத்தின் இசைக் குறியீடுகள்.

> ''கலவரத்தின் பின்னணியை அறிந்தவர்களும், அதன் கொடுமையை அனுபவித்தவர்களும் இதைக் கண்டு ஆத்திரப்படுவார்கள். படத்தின் மூலம் கலவரத்தைப் பற்றித் தெரிந்து கொள்ளும் பெரும்பான்மை மக்களின் மனதிலோ, எழுதாத காகிதத்தில் எழுதப்பட்ட எழுத்தாக மணிரத்தினத்தின் பொய் ஆழப்பதிந்துவிடும். ஹாலிவுட்டிலிருந்து ராம்போ; பாலிவுட்டிலிருந்து 'பம்பாய்'. அந்த வகையில் மணிரத்தினத்திற்கு ஹாலிவுட் செல்லும் தகுதி வந்துவிட்டது.

தீம் மியூசிக் என்று படாடோபமாக அறிவித்து பாடல் ஒலிப் பேழையிலும் சேர்க்கப்பட்டுள்ள இந்த இசை படத்தின் துவக்கத்தில் பெயர்கள் (டைட்டில்) போடும்போது ஒலிக்கிறது. பின்னணியில் ஒலிக்கும் காதல் இசை, கலவர இசையாக மாறும் போது 'நடனம் பிரபுதேவா' என்ற எழுத்துக்கள் திரையில் தோன்றுகின்றன. மசாலாப் புத்தியின் கடைக்கோடி எல்லை இதுதான். ரசிகர்கள் பிரபுதேவாவுக்கு விசிலடிக்கிறார்கள்.

புதிய கண்ணோட்டத்திற்குப் பதிலாகப் புதிய கோணத்தில் காட்சிகளைப் படம் பிடிப்பதையே தன் இலட்சியமாகக் கொண்ட இயக்குனர் - புதிய இசைக்குப் பதிலாக புதிய ஒலிகளை எழுப்புவதையே தன் வழிமுறையாகக் கொண்ட இசையமைப்பாளர். ஜாடிக்கு ஏற்ற மூடி!

● ● ●

அமெரிக்க சமூகத்தின் மீது தொலைக்காட்சியும் சினிமாவும் செலுத்துகின்ற ஆதிக்கத்தைச் சுட்டிக்காட்ட கீழ்க்கண்ட உதாரணத்தைக் கூறினார் ஒரு ஆய்வாளர்.

**தோழி:** (குழந்தையைத் தூக்கிக் கொஞ்சியபடியே) உன் குழந்தை கொள்ளை அழகு!

**குழந்தையின் தாய்:** இதென்ன பிரமாதம்! இவனை நீ போட்டோவில் பார்க்கணுமே!

நிஜவாழ்க்கையின் மீது நிழலுருவங்கள் செலுத்தக்கூடிய ஆதிக்கத்தை விளக்க எம்.ஜி.ஆர். ஜெயலலிதாவுக்கு மேல் நமக்குப் புதிய உதாரணங்கள் தேவையில்லை. வரி வடிவத்தையும் ஒலி வடிவத்தையும் பார்க்க, காட்சி வடிவத்தில் அவதாரம் எடுக்கும் பொய் பன்மடங்கு வலிமை பெறுகிறது.

● முஸ்லீம் எதிர்ப்புக் கலவரம் என்று உலகமே கூறிய பம்பாய்க் கலவரத்தை தனது படத்தின் மூலம் இந்து-முஸ்லீம் கலவரமாக மாற்றிவிட்டார் மணிரத்தினம்.

கலவரத்தின் பின்னணியை அறிந்தவர்களும், அதன் கொடுமையை அனுபவித்தவர்களும் இதைக் கண்டு ஆத்திரப் படுவார்கள். படத்தின் மூலம் கலவரத்தைப் பற்றித் தெரிந்து கொள்ளும் பெரும்பான்மை மக்களின் மனதிலோ, எழுதாத காகிதத்தில் எழுதப்பட்ட எழுத்தாக மணிரத்தினத்தின் பொய் ஆழப்பதிந்து விடும். ஹாலிவுட்டிலிருந்து ராம்போ; பாலிவுட்டிலிருந்து 'பம்பாய்'. அந்த வகையில் மணிரத்தினத்திற்கு ஹாலிவுட் செல்லும்

படிப்பகம்

www.padippakam.com

தகுதி வந்துவிட்டது.

● கலவரத்தின் முக்கியக் குற்றவாளியான தாக்கரேயை சந்தித்து சமாதானப்படுத்தியிருக்கிறார் அந்தப் பாத்திரத்தில் நடித்த டினு ஆனந்த் என்ற நடிகர். ''தாக்கரேயைச் சித்தரிப்பது எங்கள் நோக்கம் அல்ல'' என்று அறிவித்துள்ளார் படத்தின் தயாரிப்பாளர் ஸ்ரீராம்.

தணிக்கைக் குழுவின் ஒப்புதலைப் பெறுவதைவிட, கலவரத்தின் முக்கியக் குற்றவாளிகளான தாக்கரேயிடமும், சிவசேனாவின் அடியாட்களாகச் செயல்பட்ட காவல்துறை அதிகாரிகளிடமும் ஒப்புதல் பெறுவதற்குத்தான் தீவிரமாக முயன்றிருக்கிறார் மணிரத்தினம். கொலையைக் கண்டித்து எடுக்கும் படத்திற்குக் கொலைகாரனிடமே சான்றிதழ் பெறுவது என்ன ஒழுக்க நெறி?

● தாக்கரேயையோ வேறொரு அரசியல் தலைவரையோ ஒத்த ஒரு பாத்திரத்தைப் படத்தில் காட்டிவிடுவதே ஒரு சாதனையா? 'நான்தான்டா எம்.எல்.ஏ' 'நீதான்டா மந்திரி' போன்ற தெலுங்கு 'அரசியல்' படங்களும்தான் அதைச் செய்கின்றன. பொருளற்ற அற்பத்தனமான ஒரு மகிழ்ச்சியில் ரசிகர்களை ஆழ்த்துவதைத் தவிர இத்தகைய சித்தரிப்புகள் சாதித்தது என்ன?

● சில காட்சிகளை தணிக்கைக்குழு வெட்டிவிட்டதைக் காட்டி படத்தின் ஆதரவாளர்கள் முறையிடலாம். அந்தக் காட்சிகளெல்லாம் அனுமதிக்கப்பட்டாலும் படத்தின் யோக்கியதை மாறப் போவதில்லை. அதிருக்கட்டும். தணிக்கைக்கு எதிராகப் போராட வேண்டாம் என்று யார் தடுத்தார்கள்?

பாதிக்கப்பட்ட மக்களின் பேட்டிகளை நேரடியாகப் பதிவு செய்த சுமா ஜோஸனின் 'பம்பாய் ரத யாத்திரை' என்ற செய்திப் படம் தணிக்கைக் குழுவால் தடைசெய்யப்பட்டு பெட்டியில் உறங்குகிறது. வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது.

மணிரத்தினமோ 'பம்பாயை' விற்று இதுவரை 4 கோடி ரூபாய் சம்பாதித்து விட்டார் என்கின்றனர் திரையுலகத்தினர். கலவரத்தில் விழுந்த பிணங்களிலிருந்து சிவசேனா சம்பாதித்தது முதல்வர் பதவி; மணிரத்தினம் சம்பாதித்தது 4 கோடி. கூடுதலாக சமூகப் பொறுப்புள்ள இயக்குனர் என்ற பாராட்டு வேறு.

'பம்பாய்' முழுநீள கற்பனைப் படமல்ல; நடந்த சம்பவங்களை மட்டும் சித்தரிக்கும் செய்திப்படமும் அல்ல. அரை உண்மைகளையும், அற்ப உணர்வுகளையம் கலந்து தயாரிக்கப்பட்ட மசாலா. முழுப் பொய்யைவிட அபாயகரமானது அரை உண்மைதான்.

அரை உண்மைகளை வைத்துக் கொண்டு அரசியல் அரங்கில் ஆர்.எஸ்.எஸ். என்ன செய்கிறதோ அதையே மதச் சார்பின்மை வேடத்தில் மணிரத்தினம் செய்திருக்கிறார். இதன் விளைவாகத் திரிக்கப்பட்டவை கலவரம் குறித்த செய்திகள் மட்டுமல்ல; கலவரம் தோற்றுவிக்க வேண்டிய உணர்வுகளும் திரிக்கப்பட்டுவிட்டன.

''இடைவேளைக்கு முன்னால் விறுவிறுப்பா போகுது; அப்புறம் இழுத்துட்டான்'' என்பதுதான் படம் பார்த்துவிட்டு வரும் இளைஞர்களின் பொதுவான கருத்து. இதைச் சொன்னால் உடனே ரசிகர்களின் தரம் தாழ்ந்த நிலையைக் காட்டி நம்முடன் சேர்ந்து கொண்டு அங்கலாய்ப்பார்கள் இந்தத் தொழில் முறை அயோக்கியர்கள்.

பாசமலர் போன்ற கற்பனைக் கதைகளைப் பார்த்துவிட்டு மூக்கை உறிஞ்சிக் கொண்டு வெளியே வரும் ரசிகர்கள் 'பம்பாய்' எனும் கொலைக்களத்தைப் பார்த்துவிட்டு வெளியே வரும்போது 'அரபிக் கடலோரம்' என்று பாடிக் கொண்டு வருவதற்கு யார் பொறுப்பு?

ஈராக் மீதான அமெரிக்காவின் யுத்தத்தை நேரடியாக ஒளிபரப்பிய சி.என்.என் தொலைக்காட்சி, அதைப் பார்ப்பவர்களிடம் 'சண்டைப்படம்' பார்க்கும் மனநிலையைத் தோற்றுவித்தது. நமது கண்முன்னே நடந்த பிணவாடை வீசும் கோரமான மனிதப் படுகொலையையே 'கண்ணுக்கும் காதுக்கும் விருந்தாக' மாற்றித் தந்திருக்கிறார் மணிரத்தினம்.

பம்பாய் படத்தைத் தடைசெய்யத் தேவையில்லையென்று அதற்கு ஆதரவாக எழுதி 'தி வீக்' என்ற ஆங்கில வார ஏட்டின் கட்டுரையாளர் படத்தைப் பற்றி புகழ்ச்சியாகக் குறிப்பிட்டிருக்கும் கீழ்க்கண்ட வரிகள் படம் குறித்த உண்மையை எதிர்மறையில் நமக்கு உணர்த்துகின்றன.

## கலவரத்துக்கு யார் பொறுப்பு? மனித உரிமைக்குழு அறிக்கை

உண்மையில் நடந்தது என்ன? 'இந்திய மக்கள் மனிதஉரிமைக் குழுவின் சார்பில் இரண்டு ஓய்வு பெற்ற பம்பாய் உயர்நீதி மன்ற நீதிபதிகள் கொடுத்துள்ள அறிக்கை டிச'92, ஜன'93 பம்பாய் கலவரத்தின் பின்னணியை ஆராய்ந்து பாதிக்கப்பட்டோரிடம் நேரடியாக விசாரித்தறிந்து ஒரு விரிவான அறிக்கையைத் தந்திருக்கிறது. பத்திரிகைகளும் செய்தி வெளியிட்டுள்ளன.

டிசம்பர்-6' 1992 பாபர் மசூதி இடிப்புக்கு முன்னால் எவ்வளவோ இழிவு படுத்தப்பட்டும் கூட பம்பாய் முஸ்லீம்கள் அமைதி காத்தனர். மசூதி இடிக்கப்பட்டதும் தான் அதற்காகப் பெருமைப்படுவதாக எழுதினார் சிவசேனா தலைவர் தாக்கரே. அடுத்து மதுரா, காசி என்றும் அவர்கள் பேசினார். டிசம்பர் -7ம் தேதி பம்பாய் தாராவி பகுதியில் சிவசேனா ஒரு 'வெற்றி ஊர்வலம்' நடத்தியது. மசூதிகளின் மீது சாணி வீசப்பட்டது.

இதற்கும் மேல் பொறுக்க முடியாது என்ற நிலையில், போலீசிடம் அனுமதி பெற்று மசூதி இடிப்பைக் கண்டித்து ஊர்வலமொன்றை முஸ்லீம்கள் நடத்தினர். பேருந்துகள், கார்ப்பரேசன் அலுவலகம் (முஸ்லீம் நடைபாதை வியாபாரிகளின் எதிரி என்பதால்) காவல் நிலையங்கள் ஆகியவற்றின்மீது கற்கள் வீசப்பட்டன. இரண்டு கோயில்கள் மீதும் கல்லெறி நடந்தது.

''இச்சம்பவங்களுக்குப்பின் முஸ்லீம்களுக்கு எதிராகக் கலவரத்தை நடத்தும் பொறுப்பை போலீசு எடுத்துக் கொண்டது. கலவரத்தில் கொல்லப்பட்டவர்களிலும் போலீசு துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானவர்களிலும் 80% முஸ்லீம்கள்'' என்கிறார்கள் அந்த நீதிபதிகள்.

கலவரம் ஒரு சில நாட்கள் நீடித்த பின் அமைதி திரும்பிவிட்டது போல ஒரு பொய்த் தோற்றம் நிலவியது. ஆனால் மீண்டும் கலவரத்தைத் தூண்டுவதற்கான தயாரிப்புகளில் சிவசேனா, பாரதீய ஜனதா கும்பல் ஈடுபட்டிருந்தது. சாலையோரக் கோயில்களில் 'மகா ஆரத்தி' என்ற வழிபாட்டைப் புதிதாகத் துவக்கி அங்கே முஸ்லீம் எதிர்ப்புப் பிரச்சாரத்தை டிசம்பர் 26 முதல் சிவசேனா துவங்கியது. ஜனவரி 2,3 தேதிகளில் வீட்டு வசதி வாரிய ஊழியர்கள் போலச் சென்று சிவசேனா குண்டர்கள் முஸ்லீம் வீடுகளைப் பட்டியலிட்டார்கள். இரவு நேரத்தில் முஸ்லீம் குடிசைப் பகுதிகள் மீது ஒளி பாய்ச்ச மாடிக்கட்டிடங்களில் சக்தி வாய்ந்த மின்விளக்குகள் பொருத்தப்பட்டன.

இந்த தயாரிப்புகள் எல்லாம் முடிந்துவிட்ட நிலையில் ஜனவரி 5-ம்தேதி இரண்டு சுமைதூக்கும் தொழிலாளர்கள் கொலை செய்யப்பட்ட சம்பவம் நடந்தது. அது தொழிற்சங்கத் தகராறில் நடந்த கொலை என்று தான் காவல் துறையே வழக்கு பதிவு செய்துள்ளது. ஆனால் இரண்டு இந்துக்களை முஸ்லீம்கள் கொன்று விட்டார்களென்றும் முஸ்லீம்களுக்கு உடனே தக்க பாடம் கற்பிக்க வேண்டுமென்றும் தனது பத்திரிகையில் தலையங்கம் எழுதி இரண்டாவது சுற்று கலவரத்தைத் துவக்கினார் சிவசேனா தலைவர் தாக்கரே.


படிப்பகம்

www.padippakam.com

''ரகுமானின் இசையும், மணிரத்தினத்தின் கலைத்திறனும் பிரச்சினைக்குரிய, (Sensitive) உணர்ச்சியைத் தூண்டத் தக்க (கலவரக்) காட்சிகளை பின்னுக்குத் தள்ளிவிடும்.''

வேறுசொற்களில் கூறினால் உணர்ச்சி வயப்படவேண்டிய சம்பவங்களில் உணர்ச்சி மரத்துப் போகச் செய்யும் உளவியல் தாக்குதல்தான் பம்பாய்.

● ரசனையைத் தான் விரும்பும் திசையிலும், ரசிகனை தான் விரும்பும் நோக்கிலும் பண்படுத்தியிருக்கிறது பம்பாய். பல லட்சம் இளைஞர்கள் படம் பார்த்து விட்டார்கள். 'சலவை' செய்யப்பட்டவர்களில் முஸ்லீம் இளைஞர்களும் அடக்கம்.



பம்பாய்: ஊரடங்கு சட்டம் முஸ்லீம் பகுதியில்தான். ஊரடங்கு முடிந்து விட்டதா என்று எட்டிப் பார்க்கும் ஒரு முதியவர்.

இனி இப்படத்தைத் 'தடை செய்ய வேண்டும்' என்ற கோரிக்கை ஒரு வேளை தமிழகத்தில் வலுப்பெற்றால், பம்பாய் படத்துக்கு ஆதரவாக இந்துமத வெறியர்கள் வராவிட்டாலும் 'குச்சி குச்சி ராக்கம்மா'வின் ரசிகர்கள் ஆஜராகி விடுவார்கள். ரகுமானின் ரசிகர்கள் நிச்சயம் முஸ்லீம் எதிர்ப்பாளர்களாக மாறும் 'விநோதம்' கருத்தளவிலாவது நடக்கும்.

● இனி சில சட்டக் கேள்விகளுக்கு வருவோம். தமிழிலும் தெலுங்கிலும் வெளியிடப்பட்டு விட்டாலும் ஐதராபாத், வாரங்கல் மற்றும் கர்நாடகத்தின் சில நகரங்களில் முஸ்லீம் தலைவர்களின் எதிர்ப்பு காரணமாக சட்டம் ஒழுங்கு பிரச்சி ஏற்படும் என்று காவல்துறை இப்படத்தைத் தடை செய்துள்ளது. இந்திப் பதிப்பு இன்னும் வெளியாகவில்லை. தாக்கரே விவகாரம்தான் முக்கியக் காரணமாம்.

''தாக்கரே குற்றவாளிதான் என்று எந்த நீதிமன்றமும் கூறாதபோது அவரை மறைமுகமாகக் கூட அவ்வாறு சித்தரிப்பது எப்படி சட்டப்படி சரியாக இருக்கும்?'' என்று கேட்கிறார் தணிக்கைக்குழு அதிகாரி ராமகிருஷ்ணன்.

தாக்கரே என்ற பாசிஸ்டின் ஜனநாயக உரிமை பற்றிக் கவலைப்படும் தணிக்கைக்குழு தாக்குதலுக்குள்ளான ஆயிரக்கணக்கான பம்பாய் முஸ்லீம்களின் ஜனநாயக உரிமை பற்றி கவலைப்படவில்லை.

ராஜீவ் கொலையை மையமாகக் கொண்டு தயாரிக்கப்பட்டிருக்கும் 'குற்றப் பத்திரிக்கை' என்ற திரைப்படத்திற்கு தணிக்கைக் குழு அனுமதி மறுத்தது; ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதிகள் அடங்கிய 'மேல் முறையீட்டுக்குழு' அனுமதி வழங்கியது. அதை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் மனுச் செய்தது தணிக்கைக் குழு, ''ராஜீவ் கொலை வழக்கின் விசாரணை முடிவடையாதபோது இப்படத்தை வெளியிட அனுமதிப்பது விசாரணையை பாதிக்கும்'' என்று வாதாடி படத்தை மீண்டும் தடை செய்துவிட்டது.

பம்பாய் கலவரத்தைப் பற்றியும் தான் விசாரணை நடக்கிறது. ஸ்ரீ கிருஷ்ணா கமிஷனின் விசாரணை இன்னும் முடியவில்லை. அவ்வாறிருக்க கலவரம் குறித்த பொய்ச்சித்திரத்தை, சிவசேனைக்கு ஆதரவான சித்திரத்தை பிரச்சாரம் செய்யும் இந்தப் படம் மட்டும் நீதி விசாரணையைப் பாதிக்காதா? ராஜீவின் பிணத்திற்கு உள்ள 'உரிமை', கலவரத்தின் கொல்லப்பட்ட முஸ்லீம் மக்களின் பிணங்களுக்குக் கிடையாதா?

● பம்பாய் திரைப் படம் சித்தரிக்கும் கலவரத்தில் சிவசேனாவால் தாக்கப்பட்டவர்களும், உயிரிழந்தவர்களும், ஊரைவிட்டு விரட்டப்பட்டவர்களும் முஸ்லீம்கள் மட்டுமல்ல; தமிழ்நாட்டு 'இந்து'க்களும் தான். பெட்டி படுக்கையோடு சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் வந்திறங்கிய தமிழ் ' அகதிகளின் புகைப்படங்களும், கொல்லப்பட்ட தமிழர்களின் கண்ணீர்க் கதைகளும் எல்லாப் பத்திரிகைகளிலும் வெளிவந்தன. அன்றும் தமிழகம் அமைதியாகவே இருந்தது.

பம்பாய் திரைப்படம் சித்தரிக்கும் கலவரத்தில் சிவசேனாவால் தாக்கப்பட்டவர்களும், உயிரிழந்தவர்களும், ஊரைவிட்டு விரட்டப்பட்டவர்களும் முஸ்லீம்கள் மட்டுமல்ல; தமிழ்நாட்டு 'இந்து'க்களும் தான். பெட்டி படுக்கையோடு சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் வந்திறங்கிய தமிழ் அகதிகளின் புகைப்படங்களும், கொல்லப்பட்ட தமிழர்களின் கண்ணீர்க் கதைகளும் எல்லாப் பத்திரிகைகளிலும் வெளிவந்தன. அன்றும் தமிழகம் அமைதியாகவே இருந்தது.

அந்த கண்ணீர்க் கதையைத் திரித்துக் காசாக்கும் மணிரத்தினத்தின் 'பம்பாய்' இன்று தமிழகமெங்கும் திரையிடப்பட்டிருக்கிறது. இன்றும் தமிழகம் அமைதியாகவே இருக்கிறது.

● பார்ப்பனீயம், பார்ப்பன தேசியம், இந்தி ஆதிக்கம் ஆகியவற்றைக் கேள்விக்குள்ளாக்கிய தமிழக அரசியல் சூழலில், இந்த ஜனநாயகமான அரசியலை முறியடிக்கும் நுட்பமான, காலத்துக்கேற்ற உத்திகளைக் கண்டு பிடிப்பதில் தமிழகப் பார்ப்பன சக்திகள் முன்னிலையில் உள்ளன.

பூரி சங்கராச்சாரியைப் போன்ற கரடு முரடான பேச்சுக்கள் காஞ்சியில் கிடையாது. மசூதியை இடிப்போம் என்று பகிரங்கமாக அறிவிப்பதில்லை - இடித்ததைக் கண்டனம் செய்து விட்டு பிறகு 'இடிக்கப்பட்ட கட்டிடம்' என்று எழுதுவதுதான் தமிழ் பார்ப்பன ஏடுகளின் உத்தி. முரளி மனோகர் ஜோஷி ரம்பம் என்றால் மணிரத்தினம் அறுவை சிகிச்சைக் கத்தரிக்கோல். என்றாலும் உண்மைகளை வெட்டுவதில் கத்தரிக்கோல் கச்சிதமாகவே செயல்பட்டிருக்கிறது.

முன்னொரு காலத்தில் பார்ப்பன தேசியத்தின் இறக்குமதியைத் தமிழகம் எதிர்த்தது. இப்போது தமிழகத்திலிருந்து வட இந்தியாவுக்கு ஏற்றுமதியாகிறது பார்ப்பன தேசியம். நேற்று 'ரோஜா' இன்று 'பம்பாய்'. அடுத்த பொதுத்தேர்தலுக்கான பாரதிய ஜனதாவின் பிரச்சார வீடியோ தயாரிப்பை அத்வானி மணிரத்தினத்திடம் ஒப்படைக்கக் கூடும்.

– மருதையன்.

படிப்பகம்

www.padippakam.com

## கோவா:

# சுற்றுலாக் கிருமிகள்

இந்த வெள்ளைக்காரனுக்கு உடம்பு பிடித்துவிடும் கோவா சிறுமிகளுக்கு இவ்வேலைக்காக ஐந்தோ பத்தோ கிடைக்கலாம். காணக் கிடைக்காத அந்த பத்து ரூபாயில் சினிமா பார்க்லாம், புது டிசைன் வளையல் வாங்கலாம், ஸ்டிக்கர் பொட்டு வாங்கலாம், அம்மாவிடம் கொஞ்சம் கொடுத்துவிடலாம் என்று மனக்கணக்கில் கூட்டிப் பார்த்துக் கூட்டிப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருப்பார்கள். 'இதேபோல தினமும் பத்து ரூபாய் கிடைத்தால் எப்படியிருக்கும்' என்ற கனவில் திளைத்திருப்பார்கள். இவர்கள் முகத்தில் பொங்கும் வெகுளித்தனமான மகிழ்ச்சியையும் பெருமிதத்தையும் படிக்கத் தெரிந்த எவருக்கும் இது புரியக் கூடியது.

ஆனால் படுத்துக் கிடக்கும் இந்த வெள்ளைப் பன்றியின் மனதில் ஓடும் சிந்தனையை சிறுமிகள் அறிய மாட்டார்கள். ''உடம்பு பிடித்துவிட 10 ரூபாய் என்றால் படுக்கைக்கு அழைக்க எவ்வளவு தர வேண்டியிருக்கும், ஐம்பதா - நூறா? நூறு ரூபாயென்றால் எத்தனை டாலர்?'' என்பது அவன் போடும் மனக்கணக்காக இருக்கும்.



சுற்றுலாப் பயணிகளாக வரும் வெள்ளையர்கள் இந்தியச் சிறுமிகளையும் சிறுவர்களையும் விபச்சாரத்தில் தள்ளுவதைப் பற்றி சென்ற இதழில் எழுதியிருந்தோம். பிரிட்டிஷ் சுற்றுலாப் பயணிகள் கோவாவை விபச்சார விடுதியாகவும் போதை மருந்துக் கிடங்காகவும் மாற்றி வரும் செய்தி மீண்டும் வெளிவந்துள்ளது - இந்தியப் பத்திரிகையில் அல்ல, லண்டனிலிருந்து வெளிவரும் சண்டே டைம்ஸ் பத்திரிகையில்.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு வரை வருடத்திற்கு 5000 பிரிட்டிஷ்காரர்கள் மட்டுமே வந்து கொண்டிருந்த கோவாவில் இன்று வாரத்துக்கு 1000 பேர் வந்து இறங்குகிறார்கள். அதாவது ஆண்டுக்கு 5 லட்சம் பேர். பிற ஐரோப்பிய, அமெரிக்க, ஜெர்மன் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை தனி. சுற்றுலாப் பயணிகளுக்கேயான சிறப்பு தனியார் விமானங்கள் கோவாவில் வந்து இறங்கிய வண்ணமிருக்கின்றன.

''ஒரு வெளிநாட்டுக்காரன் எது வேண்டுமென்று கேட்டாலும் சரி - சிறுவனோ, சிறுமியோ, ஏன் குழந்தைதான் வேண்டும் என்று கேட்டாலும் அதை ஏற்பாடு செய்து கொடுப்பதற்கு இங்கே ஆட்கள் இருக்கிறார்கள். அவர்கள் அம்மணமாக கடற்கரையில் உருளலாம்; போதை மருந்து சாப்பிடலாம். நாம் எதுவும் செய்ய முடியாது. போலீசாலும் இதை நிறுத்த முடியாது'' என்று பொறுமுகிறார் சாந்தோபா தேசாய். கோவா மாநிலத்தின் தலைநகரான பனாஜியில் துப்பறியும் நிபுணராகப் பணியாற்றும் இவருடைய கூற்றின்படி ''கோவாவில் பிரிட்டிஷ்காரர்களின் வருகை எந்த விகிதத்தில் அதிகரித்திருக்கிறதோ அதே விகிதத்தில் மாநிலத்தில் நடக்கும் குற்றங்களின் எண்ணிக்கையும் அதிகரித்திருக்கிறது''.

ஆனால் கடந்த இரண்டாண்டுகளில் 60 பிரிட்டிஷ்காரர்கள் மீதுதான் போதை மருந்து குற்றத்துக்காக வழக்கு போடப்பட்டுள்ளது. அம்மணமாகத் திரிந்ததற்காக 10 பேர் மீது வழக்கு போடப்பட்டது; அதற்கு அபராதமாக நூறு ரூபாயை விட்டெறிந்துவிட்டு அடுத்து நிமிடமே அவர்கள் வெளியே வந்துவிட்டார்கள். கைது செய்யப்பட்ட மறுகணமே பலர் ஜாமீனில் வெளியே வந்து தங்கள் நாட்டுக்கு விமானமேறி விடுகிறார்கள். இப்படி குற்றவாளிகளைத் தப்பவிட்ட ஏராளமான வழக்குகள் கோவா நீதிமன்றங்களில் குப்பையாகச் சேர்ந்து கிடக்கின்றன.

அதிகம் சொல்வானேன், அநாதை இல்லாம் என்ற பெயரில் குழந்தைகளை ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுத்தியதற்காகவும், பள்ளிச் சிறுவர்களுடன் உடலுறவு கொள்ளும் புகைப்படங்களை ஐரோப்பிய சுற்றுலாப் பயணிகளுக்கு அனுப்பி அவர்களை கோவாவிற்குக் 'கவர்ந்திழுத்ததற்காகவும்' **ஃபிரெட்டி பீட்ஸ்** என்ற பிரிட்டிஷ்காரன் கைது செய்யப்பட்டதாக சென்ற இதழ் புதிய கலாச்சாரத்தில் எழுதியிருந்தோம். அவனை காவல்துறையே தனது சொந்தப் பொறுப்பில் ஜாமீனில் விடுதலை செய்துவிட்டது. அவனும் அச்சமின்றி கோவாவிலேயே உலவி வருகிறான்.

பத்திரிகைகளிலெல்லாம் வெளிவந்து, நாடே அறிந்த ஒரு குற்றவாளி சர்வ சாதாரணமாக விடுதலை செய்யப்படுவது எப்படி சாத்தியம் என்று நாம் வியக்கலாம். ஆனால், இவனைக் கைது செய்ய வைப்பதற்காகப் போராடிய **ஷீலா பார்ஸே** என்ற பெண்மணியோ (குழந்தை உழைப்புக்கெதிராக உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தவர் இவர்தான்) இதில் நாம் அதிர்ச்சி கொள்வதற்கு ஏதுமில்லை என்கிறார்.

''பாலியல் குற்றவாளிகளுக்கு, அதிலும் குறிப்பாக குழந்தைகளுடன் ஓரினச் சேர்க்கையில் ஈடுபடும் கிரிமினல்களுக்கு கோவா ஒரு சொர்க்கம். ஒருவேளை அவர்கள் யாரேனும் கைது செய்யப்பட்டாலும், அவர்கள் மீது 1861-ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் போடப்பட்ட ஒரு சட்டத்தின்படிதான் வழக்கு தொடர முடியும்''.

**''ஒரு வெளிநாட்டுக்காரன் எதுவேண்டுமென்று கேட்டாலும் சரி - சிறுவனோ, சிறுமியோ, ஏன் குழந்தைதான் வேண்டும் என்று கேட்டாலும் அதை ஏற்பாடு செய்து கொடுப்பதற்கு இங்கே ஆட்கள் இருக்கிறார்கள். அவர்கள் அம்மணமாக கடற்கரையில் உருளலாம்; போதை மருந்து சாப்பிடலாம். நாம் எதுவும் செய்ய முடியாது போலீசாலும் இதை நிறுத்த முடியாது,'' என்று பொறுமுகிறார் பனாஜியில் துப்பறிவு நிபுணராகப் பணியாற்றும் சாந்தோபா தேசாய்**



படிப்பகம்

www.padippakam.com

''ஆணோ, பெண்ணோ, குழந்தையோ, வயது வந்தவரோ - யாருடன் இத்தகைய சேர்க்கையில் ஈடுபட்டாலும் சரி அது ஒரு 'இயற்கைக்கு மாறான நடவடிக்கை' என்று மட்டும்தான் இச்சட்டம் சொல்கிறது. இச்சட்டத்தின் படி குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்டால் கிடைக்கக் கூடிய மிக அதிகபட்ச தண்டனையே 2 அல்லது 3 மாதச் சிறைவாசம் தான்'' என்கிறார் **ஷீலா பார்ஸே.**

காவல்துறையைப் பற்றிச் சொல்லிப் புரிய வைப்பதற்கு ஒன்றுமில்லை. அவர்கள் கடற்கரைப் பக்கமே தலை காட்டுவதில்லை. வரவேண்டிய கப்பம் காவல் நிலையத்தைத் தேடி வந்துவிடும் போது அவர்களுக்கு 'கலெக்ஷன்' வேலை மிச்சம். காவல் நிலையத்திலிருந்தபடியே இந்த விபச்சாரத்திற்குக் காவல் காக்கிறார்கள்.

வேனிற்குளியலுக்காக அம்மணமாகவும் அரை அம்மணமாகவும் கடற்கரையில் படுத்துக் கிடக்கும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் என்ன தேவைப்பட்டாலும் எழுந்து போக வேண்டிய அவசியமில்லை. போதை மருந்தா, இளநீரா, சிறுமிகளா..... தேவை எதுவென்றாலும் இருக்குமிடத்திற்கே கொண்டு வந்து சேர்க்கத் தயாராக கடற்கரையெங்கும் மொய்த்த வண்ணமிருக்கிறார்கள் தரகர்கள்.

விபச்சாரத்திற்கு இந்தியக் குழந்தைகள் கிடைப்பார்கள் என்பதை விளம்பரம் செய்து ஐரோப்பியர்களையும் அமெரிக்கர்களையும் கோவாவுக்குக் கூப்பிடுகின்றன வெளிநாட்டு சுற்றுலா நிறுவனங்கள்; டெல்லி, பம்பாய் போன்ற நகரங்களிலிருக்கும் உள்நாட்டு சுற்றுலா நிறுவனங்களோ ''வெள்ளைக்காரிகள் அம்மணமாகக் கிடப்பதைக் காண வேண்டுமா, கோவாவுக்கு வாருங்கள்'' என்று இந்தியப் பயணிகளை அழைக்கின்றன. அன்றாடம் பேருந்துகளில் வந்திறங்கும் இந்தியப் பொறுக்கிகள், தங்கள் தேசத்தின் அம்மணம் கூவி விற்கப்படுவது பற்றிச் சொரணையில்லாமல் வெள்ளைக்காரிகளின் அம்மணத்தைத் தரிசிக்க கோவா கடற்கரையில் அலைகிறார்கள்.

தங்கள் கண் முன்னாலேயே தங்களது மாநிலம் சீரழிக்கப்படுவதைக் கண்டு கொதித்துப் போன கோவா மக்கள் இந்தச் சுற்றுலாக் கிருமிகளை எதிர்த்துப் போராடத் துவங்கியிருக்கிறார்கள். 'நட்சத்திர விடுதிகள்' என்று கவுரவமாக அழைக்கப்படும் விபச்சார விடுதிகள் புதிது புதிதாய் முளைப்பதைத் தடுத்திருக்கிறார்கள். பாதுகாப்புக் குழுக்கள் அமைத்து, வெளிநாட்டுச் சுற்றுலாக் கிருமிகளின் வாகனங்களை மறித்து சாணத்தால் அடித்தே விரட்டியிருக்கிறார்கள்.

ஆனால், கோவா அரசின் சுற்றுலாக் கழகமோ, ''பிளேக் நோய் பீதி நாட்டையே உலுக்கிய போதுகூட வெளிநாட்டுப் பயணிகள் கோவாவிற்கு வருவது குறையவில்லை'' என்று பெருமையாக விளம்பரம் செய்கிறது. பிளேக் கிருமிகளைக் கண்டு எயிட்ஸ் கிருமிகள் ஏன் அஞ்ச வேண்டும்?

''அவர்களுக்கு சுற்றுலாகப் பயணிகள் முக்கியம்; அவர்கள் கொண்டு வரும் அந்நியச் செலாவணி மிகமிக முக்கியம். எனவே, கோவாவில் எது நடந்தாலும் அதை அவர்கள் கண்டுகொள்ள மாட்டார்கள்'' என்று அரசாங்கத்தைச் சாடுகிறார் ஷீலா பார்ஸே.

குழந்தைகளை விவசாயத்தில் ஈடுபடுத்தி அதன் மூலம் அந்நியச் செலாவணி சம்பாதிக்க முயல்கிறது ஈனத்தனமான இந்திய அரசு என்பதற்கு இன்னும் வேறு ஆதாரங்கள் வேண்டுமா?

## விவசாயிகளுக்குக் கிடைக்கும் கவுரவமான தொழில்!

''கோவாவை அனுபவிக்க வருகின்ற அந்நியச் சுற்றுலாப் பயணிகளின் உரிமையைக் காட்டிலும், மண்ணின் மைந்தர்களான எங்களது வாழும் உரிமை முதன்மையானது'' என்கிறார்கள் கோவா மக்கள். இதனால் ஆத்திரமடைந்த இரண்டு ஏகாதிபத்தியக் கூலி எழுத்தாளர்கள் 'இந்து' நாளேட்டில் எழுதியுள்ள ஒரு கட்டுரையில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகின்றனர்:

''விவசாயிகள், தோட்டக்காரர்கள், மீனவர்கள், வீட்டு வேலைக்காரர்கள் போன்றவர்களுக்கெல்லாம் நட்சத்திர ஓட்டல்களிலும், சுற்றுலா தொடர்பான பல்வேறு தொழில்களிலும் கவுரவமான வேலைகள் கிடைத்துள்ளன; நிறைய சம்பாதிக்கவும் முடிகிறது. மேற்கூறிய ஏழை மக்களைக் குறைந்த கூலிக்குச் சுரண்டிக் கொண்டிருந்த ஆதிக்க சக்திகள்தான் இத்தகைய போராட்டங்களைத் தூண்டிவிடுகின்றன?''

போராட்டக்காரர்கள் மீது சேறு வாரி இறைக்கும் இந்த 'காருண்யவான்கள்' விவசாயிகளுக்கும் மீனவர்களுக்கும் கிடைத்திருக்கும் கவுரவமான வேலைகள் என்ன என்பதை மட்டும் சொல்லவில்லை. வெள்ளைக்காரனுக்கு மசாஜ் செய்வதும், போதை மருந்து விற்பதும், சொந்தப் பிள்ளைகளையே கூட்டிக் கொடுப்பதும்தான் அவர்கள் கூறும் 'கவுரவமான' தொழில்கள்.

விவசாயத்தையும் மீன்பிடி தொழிலையும் ஒழித்து, இறால் பண்ணை வைத்து அந்தப் பண்ணைகளில் 'கவுரவமான' வேலை வாங்கித் தருவதாகக் கூறும் மணிசங்கர் ஐயரும் இதையேதான் சொல்கிறார். இறால் பண்ணை மூலம் விவசாயிகளின் பொருளாதாரத்தை அழித்தது போதாதென்று அவர்களது பண்பாட்டையும் சேர்த்து அழிப்பதற்கும் திட்டம் போட்டிருக்கிறார்.

தரங்கம்பாடியிலுள்ள டேனிஷ் கோட்டையை ஸ்டெர்லிங் குரூப் நட்சத்திர விடுதிக்காரர்களுக்கு குத்தகைக்கு விட்டு அங்கே நட்சத்திர விடுதிகள் கட்டி சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் திட்டம் அது. அரபிக் கடலில் கோவா; வங்காள விரிகுடாவில் தஞ்சைக் கடற்கரை. இறால் பண்ணைகளால் வேலை இழக்கும் விவசாயிகளையும் மீனவர்களையும் கோவாவைப் போலவே 'கவுரவமான' தொழிலுக்கு மாற்றிவிட மணிசங்கர் ஐயர் தொலைநோக்குடன் போட்டிருக்கும் திட்டம் போலும்!


## இறால் பண்ணை அழிப்பு போராட்டம் ஏன்?

☛ இறால் பண்ணையால் விளைநிலகளுக்கு ஆபத்தில்லையா?

☛ உவர் நிலத்தில் இறால் பண்ணை வைப்பதில் தவறில்லையா?

☛ இறால் பண்ணையால் மீனவர்களுக்கு ஏற்படும் பாதிப்பு என்ன?

போன்ற பல கேள்விகளுக்கு விடையளிக்கும் புதிய வெளியீடு.

விலை: ரூ.3/

பிரதிகள் கிடைக்குமிடம்

**கீழைக்காற்று**

10, ஔலியா சாகிபு தெரு,
எல்லீசு சாலை, சென்னை-2.


படிப்பகம்

www.padippakam.com

# மார்ச் 23 - தியாகிகள் தினம்

# தூக்குமரம் துளிர்க்கும்

மார்ச்-23 தியாகிகள் தினம். ஆகஸ்டு-15 துரோகிகள் தினம். துரோகிகள்தான் ஆட்சியில் இருக்கிறார்கள். நாட்டை மீண்டும் முழு அடிமையாக்கும் தனது திட்டத்துக்காக மக்கள் மேலும் தியாகம் செய்ய வேண்டும் என்று தியாகிகள் தினச் செய்தி வெளியிட்டிருக்கிறார் நரசிம்மராவ்.

தூக்குமேடை தியாகிகளுக்காகவே உருவாக்கப்பட்டதல்ல. துரோகிகள் கழுத்திலும் தூக்குக் கயிறு இறுகும். ஆனால் துரோகிகளுக்கு தியாகிகளைப் போன்ற புகழ்மிக்க மரணம் மறுக்கப்படும். வேடிக்கை பார்க்க, கழுத்தில் விழுந்த சுருக்குடன் ஊளையிடும் தெரு நாய்களைப் போல துரோகிகள் தூக்கிலிடப்படுவார்கள்.

தோழன் பகத்சிங்கின் இறுதி நிமிடங்களை விவரிக்கும் இக்கட்டுரை பழி வாங்கும் வெஞ்சினத்தைக் கிளறிவிடும்.

1931 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24-ஆம் நாள் செவ்வாய்க் கிழமை அவர்களைத் தூக்கிலிடும் நாள் என்று அரசு தீர்மானித்து, அவர்களிடம் தேதியும் சொல்லப்பட்டு விட்டது; நாட்டுக்கும் அறிவிக்கப்பட்டு விட்டது.

நாட்டுத் தலைவர்கள், பத்திரிகைகள், மக்கள், உற்றார், உறவினர்கள், எல்லாரும் அரசாங்கத்துக்கு வேண்டுகோள் விடுத்தார்கள் - 'எங்கள் இளஞ்சூரியன்' - பகத்சிங்கையும் அவரது தோழர்களையும் தூக்கிலிட வேண்டாம் என்று! அத்தனை வேண்டுகோளையும் ஏகாதிபத்திய அரசு தூக்கி வீசி விட்டு, அவர்களைக் கொல்லும் நாளைக் குறித்துச் சொல்லிவிட்டது!

நாடு பரபரப்பாகியது. நாள் நெருங்க நெருங்க மேலும் பரபரப்பாகியது!......

''1931 மார்ச் லட்சக்கணக்கான மக்கள் கூடப்போகிறார்கள், அந்த ஆத்திரம் கொண்ட மக்கள் கூட்டத்தை அடக்கப்போதிய பாதுகாப்பு தேவை'' என்று ரகசியப் போலீசார் அரசாங்கத்திற்கு தகவல் கொடுத்தார்கள்.

இதனால் அஞ்சி நடுங்கிய ஏகாதிபத்திய ஆட்சி, படுகோழைத்தனமான ஈனச் செயலில் ஈடுபட்டது!

சட்டம் - நீதீ - நேர்மை என்றெல்லாம் உலகத்தை ஏமாற்றும் பிரிட்டிஷ் அராஜக ஆட்சி முதல் தடவையாக, தண்டனைக் காலத்துக்கு முன்பே - முந்தின நாள் இரவிலேயே மூன்று மாவீரர்களையும் இழிவாகக் கொலை செய்துவிடத் தீர்மானித்துவிட்டது. சிறைச்சாலையின் வாசல் கதவுகள் மூடப்பட்டுவிட்டன. யாரையும் உள்ளேயோ, வெளியிலோ அனுமதிக்காமல் மூடிவிட்டார்கள்.

சிறைக்கு வெளியே இருந்த சிறை அதிகாரிகள் வெளியிலேயே இருந்து விட்டார்கள். உள்ளே இருந்தவர்கள் உள்ளேயே இருந்தார்கள். உணவுக்குக் கூட வெளியே அனுப்பப் படவில்லை! சிறைச்சாலை முழுவதும் ஏதோ ஒரு சோகம் கப்பிக் கிடந்தது.

மணி இரவு 7.30 ஆயிற்று!

எல்லோரும் எழுந்து சிறைக் கொட்டடியை நோக்கிப் போனார்கள். அவர்கள் முகத்தில் ஒரு பதட்டம் இருந்தது.

அங்கே வீர சிங்கங்கள் பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் மூவரும் கைகளிலும், கால்களிலும் விலங்கு பூட்டப்பட்டு அறைகளில் அடைக்கப்பட்டிருந்தார்கள். பகத்சிங் லெனின் எழுதிய நூல் ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தார்.

சிறை வார்டர்கள் அறைக்கதவை திறந்தார்கள். பகத்சிங் ஆச்சரியமாக அதிகாரிகளைப் பார்த்தார்.

'சர்தார்ஜீ! உங்களைத் தூக்கிலிடுவதற்கான ஆணை வந்திருக்கிறது. இதோ! தயது செய்த தயாராகுங்கள்'' என்றார் சிறை அதிகாரி.

''... நாளை 24-ந் தேதிதானே எங்களைத் தூக்கிலிட வேண்டும் என்று உத்திரவு...'' ஆச்சரியமாகக் கேட்டார் பகத்சிங்!

''ஆமாம், அது முந்திய உத்திரவு... இப்போதே தூக்கிலிடும்படி இந்த உத்திரவு''... சிறை அதிகாரி பதில் சொன்னார்.

மாவீரன் பகத்சிங் மெல்ல நகைத்துவிட்டுச் சொன்னார் ''பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு எங்கள் மீது கருணை பிறந்திருக்கிறது! அதனால்தான் இந்த அடிமை இந்தியாவில் இன்னும் ஒரு 12 மணி நேரம் கூட நாங்கள் அடிமைப் பூச்சிகளாக இருக்கக் கூடாது என்று கருணை காட்டி, இன்றைக்கே கொன்றுவிடத் தீர்மானித்து விட்டது போலிருக்கிறது. ஆகட்டும் நாங்கள் தயார்'' என்றார்!

அப்போது பகத்சிங்கைப் பார்த்த அதிகாரிகள் ''இப்படியும் ஓர் வீரப் பிறவியா?'' என்று அதிசயப்பட்டார்கள்.

மூன்று வீரர்களும் அறைக்குள்ளிலிருந்து வெளியே கொண்டு வரப்பட்டார்கள்.

''சர்தார்ஜீ! சிறைச்சாலை விதிப்படி மரண தண்டனை நிறைவேறுவதற்கு முன்னால், உங்கள் ஆத்மா சாந்தியடைய உங்களுக்கு மதச்சடங்குகள் முடிக்க வேண்டும், குருக்களும் வந்திருக்கிறார்கள், செய்யலாமா?'' என்று கேட்டார் சிறை அதிகாரி.

நாத்திகச் சிங்கம் பகத்சிங் அதை மறுத்தார். ''நாங்கள் நாத்திகர்கள்; எங்களுக்கு ஆத்மா, சடங்கு, சம்பிரதாயங்கள் எதிலும் நம்பிக்கை இல்லை, வேண்டாம்'' என்று கூறி மறுத்தார். அதி

## காந்தியின் துரோகம்

பகத்சிங்கின் தூக்கு தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்க காந்தி முயற்சி எடுத்ததாக அப்பட்டமான பொய்யை காங்கிரஸ் தலைவர் குமரி ஆனந்தன் தினமணியில் (மார்ச்-23) எழுதியுள்ளார். அதைக் கண்டித்து வாசகர்கள் பலர் தினமணிக்கு கடிதம் எழுதியுள்ளனர். அதே கட்டுரையில் புரட்சியாளர் ஆசாத்தை பூணூலுடன் படம் வரைந்திருப்பதைக் கண்டித்து நாத்திகம் ஆசிரியர் ராமசாமி கடிதம் எழுதியுள்ளார்.

உண்மையில் பகத்சிங்கைத் தூக்கிலிடுவதைத் துரிதப்படுத்தத்தான் காந்தி வேலை செய்தார். ''அவ்விளைஞர்களைத் தூக்கிலிடுவது என்று முடிவு செய்துவிட்டால் கராச்சி காங்கிரஸ் மாநாட்டுக்கு முன்பே தூக்கிலிடுவதுதான் நல்லது'' என்று இர்வினிடம் காந்தி உறுதியாகக் கூறிவிட்டதாக காங்கிரஸ் வரலாற்றை எழுதிய பட்டாபி சீதாராமய்யா குறிப்பிடுகிறார்.

28-ம் தேதி கராச்சி ரயில் நிலையத்தில் செஞ்சட்டை அணிந்த இளைஞர்கள் ''பகத்சிங்கைக் கொன்றவரே திரும்பிப் போ'' என்று காந்தியையும் படேலையும் எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தனர். இந்த எதிர்ப்பைக் கண்டு அஞ்சிய காந்தி, பகத்சிங்கின் தியாகத்தைப் பாராட்டுவதாக நயவஞ்சகமாக ஒரு தீர்மானத்தை கராச்சி மாநாட்டில் நிறைவேற்றினார். ஆனால் 3 மாதங்களுக்குப்பின் அந்தத் தியாகிகள் மூவருக்கும் லாகூரில் சிலை வைக்க ஆனந்த் கிஷோர் என்பவர் முயன்றபோது அவர்களுக்கு சிலை வைப்பது மக்களுக்கு வன்முறையில் நம்பிக்கையை வளர்க்கும் என்பதால் தனக்கு அதில் சம்மதமில்லை'' என்று எழுதினார் காந்தி. (ஆதாரம்: பகத்சிங்கும் இந்திய அரசியலும் - சுப. வீரபாண்டியன்)

இன்று இந்தத் துரோகியின் சிலை தான் முச்சந்திக்கு முச்சந்தி நட்டு வைக்கப்பட்டுள்ளது; இந்த அவமானச் சின்னங்களைப் பிடுங்கி எறியும் வரை நாட்டுப்பற்றுள்ள மனிதன் அமைதி கொள்ள முடியாது

படிப்பகம்

www.padippakam.com

## “நீ உயிர் வாழ விரும்புகிறாயா?”

*(“சிறையிலிருந்து தப்பித்துப் போய், நீ உயிர் வாழ விரும்புகிறாயா?” என்று கேட்டு, அடுத்த அறையிலிருந்த தோழர்கள் ரகசியமாக அனுப்பிய துண்டுச் சீட்டிற்குப் பகத்சிங் எழுதி அனுப்பிய இப்பதில், தன் சாவிற்கு முதல் நாள் அவர் எழுதிய கடிதம் ஆகும்)*

*மார்ச் 22, 1931*

தோழர்களே!

உயிர் வாழும் விருப்பம் இயற்கையானது. எனக்குள்ளும் அது இருக்கிறது. அதை நான் மறைக்க விரும்பவில்லை. ஆனால், அது நிபந்தனைகளுக்குட்பட்டது. சிறைக் கைதியாகவோ, கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டோ நான் வாழ விரும்பவில்லை. இந்தியப் புரட்சியின் அடையாளமாய் என் பெயர் ஆகியிருக்கிறது. புரட்சிகர இயக்கத்தின் கொள்கைகளும் தியாகங்களும், நான் வாழ்ந்தாலும் எட்ட முடியாத உயரத்திற்கு, என்னை உயர்த்தியுள்ளன.

இன்று, மக்களுக்கு என் பலவீனங்கள் தெரியாது. நான் தூக்கு மேடையிலிருந்து தப்பி விடுவேனாகில், அப்பலவீனங்கள் அவர்களுக்கு முன் வரும்போது, புரட்சியின் அடையாளம் மங்கலாம்; அல்லது ஒட்டுமொத்தமாய் மறைந்தும் போகலாம். மாறாக, புன்னகையோடு, நான் தூக்கு மேடையில் ஏறுவேனாகில், அந்நிலை, தங்களது குழந்தைகளும் பகத்சிங்காக வேண்டுமென்ற எண்ணத்தை, இந்தியத் தாய்மார்களிடம் உருவாக்கும். இவ்வாறு, நம் தேசத்தின் சுதந்திரத்திற்காய், உயிரையும் தியாகம் செய்யத் தயாராக இருப்போரின் எண்ணிக்கை அளவிறந்து கூடும்.



லாகூர் சிறையில் பகத்சிங்

அதற்குப் பின்பு, புரட்சியின் வேகத்தை, ஏகாதிபத்தியத்தால் எதிர்கொள்ள முடியாது; அவர்களின் வலிமையும், அரக்கத்தனமான முயற்சிகளும் கூட, முன்னேறுத்துச் செல்லும் புரட்சியைத் தடுத்துவிட முடியாது.

ஆனால், ஒரு விஷயம் இன்றும் என்னை உறுத்துகிறது. ஆம்! என் தேசத்திற்காகவும், இந்தச் சமூகத்திற்காகவும், ஏதாவது செய்ய வேண்டும் என்று விரும்பி, என் இதயம் நச்சரித்துக் கொண்டே இருந்தது. அத்தகைய ஆசைகளில் ஆயிரத்தில் ஒரு பங்கைக் கூட என்னால் நிறைவேற்ற இயலவில்லை. ஒருக்கால் நான் வாழ நேர்ந்தால், அவைகளை நிறைவு செய்ய எனக்கு ஒரு வாய்ப்பு கிடைக்கக் கூடும். நான் இறந்து போய் விடக்கூடாது என்ற எண்ணம், என் மனதில் எப்போதாவது ஏற்பட்டிருக்குமானால், அதற்கு இந்த எண்ணம் மட்டுமே காரணமாக இருக்கும்.

இந்த தினங்களில், நான் என்னைப் பற்றிப் பெருமைப்பட்டுக் கொண்டு, இறுதி சோதனைக்காக ஆவலுடன் காத்திருக்கிறேன். அந்த நாள் மிக விரைவில் வர வேண்டுமென்றும் விரும்புகிறேன்.

உங்கள் தோழன்
பகத்சிங்

(சுப. வீரபாண்டியன் எழுதிய 'பகத்சிங்கும் இந்திய அரசியலும்' என்ற நூலிலிருந்து)

---

*காரிகள் ஒப்புக் கொண்டார்கள்.*

*உடனே அவர்கள் மூவரின் கண்களையும் கறுப்புத் துணியால் கட்டினார்கள். கை விலங்குகளை அகற்றிவிட்டு, கைகளை பின் பக்கமாகத் துணியால் கட்டினார்கள். பின்பு தூக்கு மேடை நோக்கி அழைத்துப் போனார்கள்.*

*அப்போது, பெரிய அதிகாரிகளோடு ஜெயிலர், துணை ஜெயிலர், மற்றும் பல வார்டர்களும் துப்பாக்கி ஏந்திய படி பின்னாலேயே போனார்கள்.*

*பிரிட்டிஷாரின் கொடுங்கோல் ஏகாதிபத்திய அராஜக ஆட்சிக்கு எதிராக, 30 கோடி மக்களின் உரிமைக்கும், சம வாழ்விற்கும், தன்மானத்திற்கும் வெஞ்சமர் புரிந்த வீரச்சிங்கங்கள் தூக்கு மேடையில் நிறுத்தப்பட்டார்கள்.*

*அப்போது மாஜிஸ்திரேட் அவர்களிடம் கேட்டார்.*

*“குற்றவாளிகளே! உங்கள் கடைசி ஆசை என்ன, இருந்தால் சொல்லுங்கள்...” என்று.*

*அதற்கு பகத்சிங் சொன்னார்... “எங்களுக்கு ஒரே ஒரு ஆசைதான்! நீதிமன்றத் தீர்ப்புப்படி நாங்கள் பிரிட்டிஷ் மன்னரை எதிர்த்து யுத்தம் புரிந்தவர்கள்! எனவே எங்களை யுத்தக் கைதிகளாக நடத்த வேண்டும். சாதாரண சமூக விரோதிகளைத் தண்டிப்பது போல் தூக்கிலே போடக் கூடாது. ராணுவ வீரர்களை வரவழைத்து, துப்பாக்கியால் சுட்டுக் கொல்ல வேண்டும். இதுதான் எங்கள் கடைசி ஆசை” என்று!*

*அதை மாஜிஸ்திரேட் ஏற்க மறுத்து விட்டார். “உங்களைத் தூக்கில் போட வேண்டும் என்பதுதான் உத்தரவு. அதை நாங்கள் மாற்ற முடியாது. வேறு என்ன ஆசை...? என்று கேட்டார்.*

*“...எங்கள் கண்களை மூடியுள்ள துணியை எடுக்க வேண்டும். நாங்கள் பிறந்த இந்த பாரத மண்ணைப் பார்த்தபடியே சாக விரும்புகிறோம்” என்றார் பகத்சிங்.*

*மூன்று பேருடைய கண்களிலும் கட்டப்பட்ட கறுப்புத் துணியை அகற்ற ஆணையிட்டார் மாஜிஸ்திரேட்!*

*முதலில் சிங்க ஏறு பகத்சிங் தூக்கு மேடையில் நிறுத்தப்பட்டார்.*

*கொலையாளி ஒருவன் அவர் கழுத்தில் தூக்குக் கயிற்றை மாட்டினான்.*

*மாவீரர் பகத்சிங் உரத்த குரலில் தனது தோழர்களிடம் “ராஜகுரு வருகிறேன்! சுகதேவ் வருகிறேன்! என்று பிரியா விடை பெற்றார்! விசை அமுத்தப்பட்டது. தொங்கிய உருவத்தின் உயிர் பிரிந்தது!!*

*அப்போது, உணர்ச்சிப் பிழம்புகளான ராஜகுருவும் சுகதேவும் —*

*“புரட்சி ஓங்குக!”*

*“பகத்சிங் வாழ்க!”*

*“ஏகாதிபத்தியம் ஒழிக!”*

*“யூனியன் ஜாக் கொடி வீழ்க!”*

*— என்று விண்ணதிர முழங்கினார்கள்!*

*இந்த இடியோசை, சிறைச்சாலை முழுவதும் எதிரொலித்தது.*

*எல்லாக் கைதிகளுக்கும் அப்போது தான் விஷயமே புரிந்தது.*

*மாவீரர்கள் மூவரும் தூக்கிலிடப் படுகிறார்கள். வழக்கத்துக்கு விரோதமாக இரவிலே தூக்குப் போடப்படுகிறது என்பதை அறிந்த மொத்தக் கைதிகளும்.*

*“பகத்சிங் வாழ்க!”*

*“ஏகாதிபத்தியம் ஒழிக!”*

*என்று வானதிர முழக்கமிட்டார்கள்! சிறைச்சாலையே அதிர்ந்தது. 30 கோடி இந்திய மக்களும் கர்ஜிப்பதைப் போலிருந்தது. மனித குலமே கதறியது!*

***(நாத்திகம்: பி. ராமசாமி எழுதிய நாத்திகச் சிங்கம் பகத்சிங் என்ற நூலிலிருந்து சில பகுதிகளின் சுருக்கம்)***

படிப்பகம்

www.padippakam.com



# கேட்ரோ சேதி!

## அமெரிக்காவின் இந்தித்திணிப்பு

ஏப்ரல் 9 முதல் ஸ்டார், ஜீ டிவி நிறுவனங்கள் 10 மணிநேர இந்தி நிகழ்ச்சிகளைத் தொடங்கப் போகின்றன. அதற்காக 1500 இந்திப் படங்களுக்கான டி.வி காட்சி உரிமைகளை வாங்கிவிட்டன. பிரபல இந்தி இயக்குநர் பிரகாஷ் மெஹரா போன்றவர்கள் டி.வி., படம் தயாரிக்க ஒப்பந்தம் செய்துள்ளனர். விரைவில் 24 மணி நேர இந்தி ஒளிபரப்பாக மாற்றவிருக்கின்றார். இந்தியில் பிரம்மாண்டமான தயாரிப்புகளுக்குக் கடன் கொடுக்கவும் போகின்றனர்.

இந்திய சினிமா ஹாலிவுட் தரத்தை எட்டிப் பிடிக்கவில்லையே என்று இனி அங்கலாய்க்கத் தேவையில்லை. ஹாலிவுட் இந்தி சினிமாவைக் கட்டிப் பிடித்துவிட்டது.

## ஊதாரிக் கூட்டம்

*மைய அரசின் கணக்குத் தணிக்கைக் குழுவின் 92-93 ஆண்டுக்கான அறிக்கை வெளியாகியுள்ளது. வெளியுறவுத்துறை அதிகாரிகளின் விருந்துச் செலவுகள் அதில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒரு விருந்துக்கு ஒரு நபருக்கு இறக்குமதிச் சாராயம் 28 பெக்குகள் (கோப்பைகள்); ஒரு பெக் விலை ரூ. 250; 28 பெக்குகளுக்கு ரூ. 7000 செலவு, இதுதவிர ஒவ்வொருவருக்கும் அந்நிய சிகரெட் ஒரு பாக்கெட். இந்தக் கொசுறுகளோடு அவர்கள் பன்றி போல் தின்றது ஆயிரக்கணக்கில் ஆகும். '92-93'-ல் செலவு மொத்தம் சுமார் 16 லட்சம் என்று கணக்கில் உள்ளது.*

*விருந்துகளில் செலவான புட்டிகளுக்கும், பாக்கெட்டுகளுக்கும் வரவு செலவுப் பதிவு எதுவும் கிடையாது. அந்நிய நாட்டு விருந்தினர்க்கு மட்டும்தான் சாராயம் கொடுக்கப்படலாம் என்பது அரசு விதி; அரசின் 'ஐதராபாத் இல்லத்'தில் மட்டும்தான் விருந்து நடத்தப்பட வேண்டும்; ஆனால் நேர் எதிராக ஐந்து நட்சத்திர ஓட்டலில் மட்டும்தான் விருந்து நடத்திக் கும்மாளம் அடிக்கிறார்கள்.*

*இந்த விருந்துகளில் நடப்பது ஊதாரித்தனம் மட்டுமல்ல; நாட்டை அடகு வைக்கும் பேரங்களும்தான்.*

## அவர்களுக்குள் செல்லமான உரசல்!

*சென்னை சேத்துப்பட்டு ஆர்.எஸ்.எஸ். அலுவலகம் மிக எளிமையான முறையில் ஒரு கோடிக்குக் கட்டப்பட்டுத் திறப்பு விழா மார்ச் 6 அன்று நடந்தது. விழாவில் 'சோ' பேசியபோது ''ஆர் எஸ் எஸ் இயக்கத்தின் நேர்மையையும் அது ஆற்றிவரும் தொண்டையும் பாராட்டுகிறேன்'' என்று முதலில் ஆர்.எஸ்.எஸ் பஜனை பாடிவிட்டு, கூடவே ஆர்.எஸ்.எஸ்.ஸோடு தான் மாறுபடுவதாகச் சில கருத்துக்களையும் பேசினார்.*

*''பாபர் மசூதி இடிக்கப்பட்டதை வன்மையாகக் கண்டிக்கிறேன். ஒரு தவறை மற்றொரு தவறால் சரிசெய்ய முடியாது.'' - இது சோ. முசுலீம்கள் கோயிலை இடித்துத்தான் பாபர் மசூதியைக் கட்டினார்கள் என்பது சோவின் பொருள். ''மேலும் காசி, மதுரா கோயில் பிரச்சினைகளைக் கிளப்பும் நேரமல்ல இது. ஆர்.எஸ்.எஸ் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் தங்களது சாமர்த்தியத்தால் முஸ்லீம் மதத்தினருடன் பேசி பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண வேண்டும்'' என்று சோ பேசினார். ''தற்போது பேசித் தீர்த்துக் கொண்டு வேறு ஒரு சமயத்தில் பிரச்சினையை எடுக்கலாம்'' என்பது பொருள். ''ஆர்.எஸ்.எஸ் காரர்கள் சாமர்த்தியசாலிகள் என்றால்'', ''பார்ப்பனர்கள் சாமர்த்தியசாலிகள்'' என்று பொருள். எனவே சோ பேசியதன் உண்மைப் பொருள் ஆர்.எஸ்.எஸ்.ஸோடு மாறுபட்டது அல்ல.*

*ஆனாலும் கூட்டத்திலிருந்து சிலர் கூச்சல் போட்டார்கள். உடனே சோ ''நீங்கள் இந்தக் காலத்து அரசியல்வாதிகளை விட மட்டமானவர்கள் எனக் கருதுகிறேன். உங்களது மிரட்டலுக்குப் பயப்பட மாட்டேன். தொடர்ந்து எனது கருத்துக்களைத் தைரியமாகக் கூறுவேன்.'' என்று பேசினார். கூட்டத்தில் அமைதி திரும்பியது.*

*கூட்டத்தில் சிலர் கூச்சல் போட்டது மிரட்டல் அல்ல; அஞ்சமாட்டேன் என்று சோ மார்தட்டியது ஆர்.எஸ்.எஸ் பற்றி முழுக்க விமரிசிக்கும் துணிச்சலும் அல்ல. உண்மையிலேயே கருத்து மோதல் என்றால் உடனே அமைதி திரும்பியது எப்படி?*

*அவர்களுக்குள் இப்படிச் செல்லமான உரசல் வரும். அவ்வளவுதான்.*

## புதியவகை வருணாசிரமம்!

*கொல்லைக்குப் போவதற்கும் காசு பிடுங்கிக் கொள்ளையடிக்கும் தனியார் நிறுவனம் சுலப் இண்டர்நேஷனல்*

*மனித மலத்தை மனிதனே அள்ளும் தொழிலை ஒழித்து நாட்டின் அனைத்து துப்புரவாளரையும் அதிலிருந்து விடுவிக்கப் போகும் தேவதூதன் போல சுலப் தன்னைக் காட்டிக் கொள்கிறத. இதற்காக சோதனை முயற்சியாக (!) டெல்லியில் 'துப்புரவாளரைத் தத்து எடுக்கும் திட்டம்' ஒன்றை அறிவித்திருக்கிறது. அதில் 'பிரபலஸ்தர்கள்' ஐ.கே. குஜ்ரால், மார்கரெட் ஆல்வா, மணிசங்கர் ஐயர், பட்கோங்கர் போன்றவர்கள் உறுப்பினர்கள்.*

*இந்த ஏற்பாட்டின்படி துப்புரவுப் பணியாளர்கள் மேட்டுக் குடியினரால் தத்து எடுக்கப்படுவார்கள். துப்புரவாளர் வீட்டுக்கு மேட்டுக் குடியினர் சாப்பிட வருவார்கள். மேட்டுக் குடியினர் வீட்டுக்கு இவர்கள் போகலாம்.*





படிப்பகம்

www.padippakam.com

உறுப்பினர் வீடுகளில் திட்டம் அமலான முறையே வேடிக்கையானது. ஐ.கே. குஜ்ரால் கவுசல்யா தேவி என்ற 35 வயது துப்புரவுப் பணியாளரைத் தத்து எடுத்துக் கொண்டார். கவுசல்யா தேவி ஒரே ஒருமுறை குஜ்ரால் வீட்டுக்குப் போனார். அங்கு ஒரு கோப்பை தேநீர் கொடுத்தார்கள். அதோடு சரி. கவுசல்யா தேவி குடும்பத்தோடு அமர்ந்து சாப்பிடவும் இல்லை, இவர் அவர்களின் சேரிக்குப் போகவும் இல்லை. காரணம், நேரம் இல்லையாம். இதற்குப் பதிலாக அவளது பொருளாதார நிலையை உயர்த்துவதாக, ஐந்து நட்சத்திர ஓட்டல் 'சென்டாரில்' பெருக்கும் வேலை வாங்கிக் கொடுத்து விருந்துபசார கலாச்சாரச் சிக்கலை கைகழுவிவிடலாம் என்று குஜ்ரால் எண்ணினார். ஓட்டல் ஏற்றுக் கொள்ளவில்லை. ஓட்டல் நிர்வாகத்தின் மனோநிலை மாறவில்லையே என்று குஜ்ரால் அங்கலாய்க்கிறார்.

அவ்வப்போது அழைத்து தேநீர், சாப்பாடு தந்தால் சரியாகிவிடுமா? 'தீண்டாமை' நீக்கப்பட்டுவிடுமா? முதலில், 'சுலப்'பின் திட்டமே கோளாறானது. அதன் அறிவிப்பின்படி ஈயத்தில் ஒரு துளி தங்கம் பட்டால் கூடப் பிரகாசிக்குமாம்; படித்தவரோடு சேர்ந்தால் முட்டாள் கூட மேதாவி ஆகலாமா. சுலப் பொறுக்கி எடுத்த மேட்டுக்குடியினர் தான் எல்லாவற்றிலும் மேலானவர், சரியானவர் என்ற மேல்சாதி அகங்காரமும் சாதி வெறியும் தலைக்கேறியவர்கள். இவர்களைப் பார்த்து துப்புரவாளர்கள் என்ன கற்றுக் கொள்ள முடியும்?

பிரச்சனை அங்கிருக்க, துப்புரவாளர் போன்ற தாழ்த்தப்பட்டவரிடம்தான் பிரச்சனை இருக்கிறதென்பது 'சுலப்'பும் உறுப்பினர்களும் கருதுகிறார்கள். அவர்கள் முட்டாள்கள், இவர்கள் அவர்களைப் புத்திசாலிகளாக்கப் போகிறார்களாம்.

தாழ்த்தப்பட்டவர்கள் ஓர் அரசியல் சக்தியாக அம்பேத்கர் தரப்பில் சேருவதைத் தடுப்பதற்காக காந்தி சமபந்தி போஜனம் என்ற நாடகத்தை ஆடினார். மேல்சாதிக்காரர்கள் திருந்துவதற்கு ஒரு வாய்ப்பு கொடுங்கள் என்று அம்பேத்கரிடம் கோரினார். இன்று தத்தெடுப்பவர்களோ இன்னமும் பச்சையாக உயர்சாதி மேட்டுக்குடி மனோபாவத்தைக் காட்டுகிறார்கள்.

துப்புரவுத் தொழிலாளர்கள் இப்படியெல்லாம் சிறுமைப்படவும் கேவலப்படவும் வேண்டுமா?

முற்போக்கு நூல்களுக்கு
ஒரு முகவரி
**கீழைக்காற்று**
10, ஔலியா சாகிப் தெரு,
எல்லீஸ் சாலை, சென்னை 2.



## தயா பவார்:

# பார்ப்பனியத்தின் தலித் அவதாரம்

“ஒருமுறை நான் ரயில் வண்டியில் பிரயாணம் செய்து கொண்டிருந்த போது பெற்ற அனுபவம் இது. ரயில் ஒரு ஸ்டேஷனில் நிற்கிறது. எனக்கு எதிரே இருந்த மாது ஒருத்தி, கண் பார்வை இழந்தவள். உயர்ஜாதியைச் சேர்ந்தவள், வண்டி நிற்கும்போது, தான் கொண்டு வந்திருந்த உணவுப் பொட்டலத்தைப் பிரித்தாள். அந்தச் சமயத்தில் ரயில் பெட்டியைச் சுத்தம் செய்யும் சிறுவன் வண்டிக்குள் துடைப்பத்துடன் நுழைவதை அவள் உணர்ந்து கொள்கிறாள். அவன் தன்னை நோக்கியே வருவது நெருங்கிவரும் காலடிச் சப்தத்திலிருந்தே அவளுக்குத் தெரிந்து விடுகிறது. கண்ணற்றவர்களுக்கு சப்த உணர்வு பழக்கத்தில், அனுபவத்தில் கூர்மையடைந்து விடுகிறது.

“அந்தப் பையன் ரெயில் பெட்டியைக் கூட்டுபவன், தாழ்ந்த ஜாதியைச் சேர்ந்த பையன். தான் உணவருந்தும் போது தன்னை நெருங்கி வருவதை உணர்ந்து “கிட்டே வராதே, ஒதுங்கிப் போ” என்று கூச்சலிடுகிறாள்.... அவளது கூச்சலோ அந்தச் சிறுவனைக் கோபப்படுத்தியிருக்க வேண்டும். அவன் வேண்டுமென்றே அவள்மீது உரசிக் கொண்டே சென்றான்.

“அந்த மாது உரத்த குரலில் அவனைத் திட்டிக் கொண்டே சாப்பிடப் பிரித்திருந்த பொட்டலத்தை வெளியே தூக்கி எறிந்து விடுகிறாள். அன்று நான் பார்த்தவரை, அவள் பட்டினியாகவே கிடந்தாள். இந்த நிகழ்ச்சி எனக்கு மிகவும் வேதனையளித்தது. எத்தனை ஆயிரம் வருடங்களாக, தலைமுறை, தலைமுறையாக, ஒரு சந்ததி பின்வரும் சந்ததிக்கு இத்தகைய கொடுமையான ஜாதி வேற்றுமை உணர்ச்சிகளைப் படிப்பித்து, அதை மதிப்பீடுகளாக, வாழ்க்கை முறைகளாக சுமத்தி, வாழ்க்கையை வேதனையாக்கி வந்துள்ளது.

“அன்று அந்த மாது பட்டினி கிடந்தது, அவளது மூத்த தலைமுறை, அவள் பெற்றோர், அவள் சமூகம், அவள் மீது சுமத்திய படிப்பித்த நம்பிக்கைகளுக்காக, ஜாதி உணர்வுகளுக்காக, அது அவளே தேர்ந்தெடுத்த ஜாதி வெறி அல்ல. அவள் மீது சுமத்தப்பட்டுள்ளது. அவளறியாது சுமக்கும் சுமை. அவளுக்குக் கற்பிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகள். அதற்கு அவள் பொறுப்பல்ல. தனக்குப் பொறுப்பில்லாத அவள் சுமக்கும் சுமைக்காக அவள் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது.”

இது, தலித் இலக்கியத்தின் முன்னோடிகளில் ஒருவராகச் சொல்லப்படும், பத்மஸ்ரீ உட்பட விருதுகள் பல பெற்ற பிரபல மராத்தி தலித் எழுத்தாளர் தயா பவர் என்பவரது அனுபவமும், கருத்துமாகும். அவர் தில்லி சாகித்திய அகாதமியில் சமீபத்தில் உரையாற்றிய போது கூறியது.

இதற்குமுன்பாக, ஜாதி வேற்றுமைகளும் ஒடுக்குமுறைகளும் பிறப்பித்த இன்னுமொரு வகை முரண் என்று அதே தயா பவர் பின்வரும் அனுபவத்தைக் கூறினார். “வாழ்க்கையில் வெற்றியும் சமூகத்தில் அந்தஸ்த்தும் பெற்ற தலித் மத்திய தர நிலை அடைந்ததும் தன்னை மிக உயர்ந்தவனாக புதிய பிராமணனாக எண்ணிக் கொள்கிறான். அவ்வளவாக வெற்றியடையாத, இன்னமும் இந்நிலையில், வறிய நிலையில் உழலும் தன் ஜாதி சகாக்களை தன் உறவினரை இழிவாகப் பார்க்கத் தொடங்குகிறான். தலித்துக்களிடையில் இவன் பிராமணனாகிவிடுகிறான். அதை ரசிக்கிறான். அவனுக்கு இந்தப் புதிய அந்தஸ்து மகிழ்ச்சி தருகிறது.”

படிப்பகம்

www.padippakam.com

மேற்கண்ட இருவேறுவகையான அனுபவங்களை ஒப்பிட்டுப் பின்வருமாறு கருத்துக் கூறுகிறார், தயாபவர்: ''ஒன்று தாழ்த்தப்பட்ட தலித் தன் புதிய அந்தஸ்தில், சமூக வெற்றியில் தன்னை புதிய பிராமணனாக உணர்த்திக் கொள்ளும், தன் வறிய சகாவை உறவினனை இழிந்து நோக்கும் தானே தேர்ந்து மேற்கொள்ளும் மனப் போக்கு. இம்மனப் போக்கிற்கு, பொறுப்பு அவனேதான். ஏனெனில் இது அவனது தேர்வு. மற்றொன்று தான் தேர்ந்தெடுக்காத, தனக்கு மரபினால், வழக்கத்தினால், பிறப்பினால் அளிக்கப்பட்ட, உணர்வுகள். இதில் தேர்வு இல்லை.''

இங்கே தயா பவர் ஒப்பீடு செய்து கூறுவதைப் போல மேற்கண்ட இரண்டு அனுபவங்களும் ஒன்றுக்கொன்று முரணானவையோ, மாறானவையோ அல்ல. புதிய பிராமணனாகிவிட்ட இந்த தலித்தும், கண்பார்வை இழந்த அந்த மேல்சாதிப் பெண்ணும் ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்கள்.

> மற்ற மத்திய தர தலித்துக்களை புதிய பிராமணன் என்று கூறும் தயா பவரோ நடு புதிய பிராமணன்தான்; எனவேதான் மேல்சாதிக்காரப் பெண்ணின் சாதிவெறி 'அவளது தேர்வு அல்ல; அதற்கு அவள் பொறுப்பல்ல' என்று வக்காலத்து வாங்குகிறார்; அந்தப் பெண்ணின் சாதித்திமிரால் இழிவுபடுத்தப்பட்ட கீழ்சாதிச் சிறுவனின் உணர்வுகளை ஒதுக்கிவிட்டு, அவள் பட்டினிக்கிடந்த வக்கிரத்துக்காக மனமிறங்கி வருந்துகிறார். மேலும் அவளது வக்கிரத்தை நியாயப்படுத்துவதற்காக புதிய பிராமணனாக மாறும் தலித்தோடு ஒப்பிடுகிறார்.

ஆயிரம் ஆண்டுகளாக, தலைமுறை தலைமுறையாக தலித்களின் தலையில் குந்தி அதிகாரம், ஆதிக்கம் செய்யும் மேல்சாதித் திமிரை அந்தப் பெண் ஒரு சுமையாகவே கருதவில்லை. அது அவளாகவே சம்பாதித்தது அல்லதான்; என்றாலும் அதைப் பெருமைக்குரிய பரம்பரைச் சொத்தாக ஏற்று அனுபவித்து வருகிறாள்.

வாழ்க்கையில் வெற்றியும் சமூகத்தில் தகுதியும் பெற்றுவிட்ட அந்த தலித் புதிய பிராமணனாக நடந்து கொள்வதற்கு பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. தயாபவர் கூறுவது போல அது அவனுடைய தேர்வு மட்டுமல்ல. சமூக நிர்ப்பந்தம் காரணமாக அவன் அதைத் தேர்வு செய்து கொள்கிறான். ஆனால் அதற்கு அவன் பொறுப்பானவன் அல்லவென்றும் கூற முடியாது.

வர்க்க ரீதியில் மத்திய தர நிலையை அடைந்துவிட்ட அந்த தலித் சமூக ரீதியில் இன்னமும் இழிவாகவே நடத்தப்படுகிறான். சாதி ரீதியில் இன்னமும் ஒடுக்கப்படுகிறான். இவற்றிலிருந்து தப்பித்துக் கொள்ளும் வழிமுறையாக அவன் புதிய பிராமணனாக நடந்து கொள்கிறான். இதுவும் ஒரு பிரமைதான்; உண்மையில் அவன் சமூக இழிவு, சாதி ஒடுக்கு முறையில் இருந்து தப்பித்துக் கொள்ள முடிவதில்லை. இருந்தபோது அப்படி நடந்து கொள்ளும் படியான நிர்ப்பந்தம் வெளியிலிருந்து வருகிறது.

சமூகத்தின் பெயரால் இன்றைய நிறுவனங்களின் ஒரு அங்கமாகி விட்ட அவன் அப்படிப்பட்ட மேட்டுக் குடியாக மாறிவிடுவதற்குக் கற்றுக் கொடுப்பதும், வழிகாட்டுவதும், நிர்ப்பந்திப்பதும் மேல் சாதி கட்டுமானங்கள்தான். இல்லையானால் அந்தக் கட்டுமானங்களுக்கு வெளியிலிருந்து அவன் போராட வேண்டும். ஒரு பிழைப்பு வாதியாக மட்டும் அவன் இருக்கும்வரை அது முடியாது.

தன்னை விருந்துண்ண அழைக்கும் மேல் சாதிக்காரர்கள் தம்மிடம் அதீதமான, செயற்கையான சமத்துவத்தைக் காட்டுவதன் மூலம், ''என் ஜாதி எனக்குத் திரும்பத் திரும்ப நினைவுபடுத்தப்படுகிறது. ஜாதி வேற்றுமை நினைவுபடுத்திக் கொள்ளப்படுகிறது'' என்கிறார், தயாபவார். இப்படி, மத்திய தர நிலைக்கு உயர்ந்துவிட்ட தலித்தை புதிய பிராமணனாக மாற்றும் நிர்ப்பந்தம் சிலசமயம் நயவஞ்சகமாகவும் சில சமயம் பகிரங்கமாகவும் வருகிறது என்பதுதான் உண்மை.

மற்ற மத்திய தர தலித்துக்களை புதிய பிராமணன் என்று கூறும் தயா பவரே ஒரு புதிய பிராமணன்தான். எனவேதான் மேல்சாதிக்காரப் பெண்ணின் சாதிவெறி அவளது தேர்வு அல்ல; அதற்கு அவள் பொறுப்பல்ல என்று வக்காலத்து வாங்குகிறார்; அதேசமயம் புதிய பிராமணனாக தலித் ஒருவன் மாறிவிடுவது அவனுடைய தேர்வு, அதற்கு அவன் மட்டுமே பொறுப்பு என்று குற்றஞ்சாட்டுகிறார். இரண்டுமே ஒரே நாணயத்தின் இரு பக்கங்கள் என்று காண்பதற்குப் பதில் எதிரெதிரான, வேறுவேறான முரண்பட்ட போக்குகள் எனச் சித்தரிக்கிறார்.

அந்தப் பெண்ணின் சாதித் திமிரால் இழிவுபடுத்தப்பட்ட கீழ்ச்சாதிச் சிறுவனின் உணர்வுகளை ஒதுக்கிவிட்டு, அவள் பட்டினி கிடந்த வக்கிரத்துக்காக மனமிரங்கி வருந்துகிறார். மேலும் அவளது வக்கிரத்தை நியாயப்படுத்துவதற்காக புதிய பிராமணனாக மாறும் தலித்தோடு ஒப்பிடுகிறார்.

சாதி ஆதிக்கத்தினால் தலித்துக்கள் அனுபவிக்கும் கொடுமைக்குச் சமமாக மேல்சாதிக்குள்ளாகவே நிலவும் ஏற்றத் தாழ்வுகளை எடுத்துக் காட்டி அனுதாபம் கொள்கிறார். ''உயர்சாதி மக்களுக்குள்ளும் கூட இவ்வாறு துக்கங்கள், ஒடுக்குமுறைக் கொடுமைகள் நிகழ்கின்றன. கௌரவமான காரியங்களில் தன் ஜீவிதம் காணும் பிராமணன், ஈமச் சடங்குகள் நடத்திக் கொடுக்கும் பிராமணனை இழிவாக நடத்துகின்றான்'' என்று கூறுகிறார்; இதோடு புதிய பிராமணனாக மாறும் தலித் வறிய நிலையில் வாழும் தன் ஜாதி சகாக்களையும் தன் உறவினரையும் இழிவாகப் பார்ப்பதை இணைய வைக்கிறார்.

இது போதாதா, அடிக்க வந்த துடைப்பத்தையே, அக்கிரகாரத்தை சுத்தம் செய்யப் பயன்படுத்துவதில் வல்லவர்கள் அல்லவா, பார்ப்பன சனாதனிகள்! அடிமட்டத்தையும், அடக்குமுறைகளையும் கடந்து சமூகத்தின் கௌரவமான மேல்சாதிக்காரர்களின் அங்கீகாரத்தைப் பெற்று அவர்கள் வீட்டிலேயே விருந்துண்ணும் நிலைக்கு உயர்ந்து விட்டவர் தயாபவர். சங்கராச்சாரியின் சாதிக் கண்ணோட்டமும், தயா பவாரின் சமரச கண்ணோட்டமும் பூணூலுக்குப் பொருந்தி விடுவதால், பார்ப்பன ''ஃபைனான்ஸ் கம்பெனி - ஸ்ரீராம் சிட்பண்ட்ஸ்'' நடத்தும் ''சுபமங்களா''வும், இலக்கியத் துறையில் இன்னொரு ''சுப்புடு''வுமான வெங்கட் சாமிநாதனும் ஓடோடிப் போய் அவருடன் உறவாடுகின்றனர்.

தில்லை வாழ் அந்தணர்கள் நந்தனைக் கொளுத்திச் சாம்பலாக்கிவிட்டு இறைவனைச் சேர்ந்ததாக பக்திமார்க்கத்தைக் காட்டினார்கள்; தில்லிவாழ் அந்தணர் வெங்கட்சாமிநாதனும் தலித் இயக்கம், தலித் இலக்கியத்தில் எஞ்சியிருக்கும் போர்க்குணத்தை, பார்ப்பன சனாதனத்துக்கு எதிரான அதன் கலகத்தைக் கொளுத்திச் சாம்பலாக்கிவிட்டு, தயாபவரின் தயாள குணத்தையே தலித் இலக்கியமாக்கி தன் சமூகத்துக்குச் சேவை செய்திருக்கிறார்.

தயாபவர் போன்ற தலித் எழுத்தாளர்களின் தவறான கருத்துக்களையே துருப்புச் சீட்டாகக் கொண்டு தலித் மக்களின் பேராவேசத்தை இலக்கியத் திறனாய்வு என்கிற பெயரில் திசை திருப்பும் வேலையைத்தான் வெங்கிட்டு செய்திருக்கிறார். தலித் இயக்கத்தின் தோற்றத்தைத் தொகுத்துக் கூறும் வெங்கட் சாமிநாதன், மராட்டியத்தில் மகாத்மா பூலே, அம்பேத்கர், ''இந்துவாகச் சாகமாட்டேன்'' என்று அறிவித்தது உட்படக் கூறிவிட்டு தலித் இயக்கத்தின் தோற்றமே ''பார்ப்பன இந்துமதக் கொடுமைக



படிப்பகம்

www.padippakam.com

ளுக்கு எதிரான குரல்'' என்ற பின்னணியில் வகைப்படுத்தாமல் பொதுவாக ''ஒடுக்குமுறைக்கு எதிரான எழுச்சி'' என்று வசதியாக திரித்துச் சொல்லுகிறார்.

திவசம் கொடுக்கும் பார்ப்பானுக்கும், அந்திகாரியான தலித்துக்கும் சமூக ஒடுக்கு முறை ஒரே அளவிலானது தானா? இல்லை. ஒட்டு மொத்த சமூகத் தகுதியில் ஈமச்சடங்கு பார்ப்பனனுக்குக் கீழ்ப்பட்ட உறவுநிலைதான் தலித்துக்கு. ஈமச்சடங்கு செய்யும் பார்ப்பான், அதிகாரி தான் என்பதற்காக ஒரு தலித்துக்கு அதைச் செய்வானா? ஒன்றுக்கு கீழ் ஒன்றாக அடுக்கு அடுக்கலான முறையில் அமைந்துள்ள சாதி முறையையே தனது சாதி ஆதிக்கத்தைப் பூசி மொழுக இங்கே பார்ப்பனர்களால் பயன்படுத்தப்படுகிறது. இந்த உண்மைகளை இன்னமும் இழுத்துப் போர்த்த தயாபவாரின் வார்த்தைகளையே, தத்து எடுத்திருப்பதுதான் வெங்கிட்டின் '' பார்ப்பன சமர்த்து''.

**தலித் இயக்கத்தின் தோற்றத்தை தொகுத்துக் கூறும்'வெங்கட் சாமிநாதன், மராட்டியத்தில் மகாத்மா பூலே, அம்பேத்கார், ''இந்துவாகச் சாகமாட்டேன்'' என்று அறிவித்தது உட்படக் கூறிவிட்டு'தலித் இயக்கத்தின் தோற்றமே ''பார்ப்பன இந்துமதக் கொடுமைகளுக்கு எதிரான குரல்'' என்ற பின்னணியில் வகைப்படுத்தாமல், பொதுவாக ''ஒடுக்கு முறைக்கு எதிரான எழுச்சி என்று வசதியாக திரித்துச் சொல்லுகிறார்.**

சமூக உறவில் தன் மேல் சாதியைக் குறித்துப் பெருமை பாராட்டுவதும், அரசாங்கப் பதவி என்னால் தானும் ஒடுக்கப்பட்டவன் என்று பொய்ச் சான்றிதழ் கொடுத்தும் பிழைக்கும் பார்ப்பன,மேல் சாதிக் கயமைக்கு சட்டபூர்வ நியாயம் கற்பிப்பதுதான் அதிகாரியான தலித்தையும் ஈமச் சடங்கு நடத்தும் பார்ப்பனனையும் இணை வைப்பது.

தலித் இலக்கியம், இயக்கப்போக்கில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை கோமல்கள் வெங்கிட் டுகள் சரியாகவே புரிந்து கொண்டு பயன்படுத்திக் கொள்கின்றனர்.

வெங்கட் சாமிநாதன் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்: ''தயா பவாரின் பார்வையில், மராத்தி தலித் எழுத்து இப்போது இலக்கியமாகப் பக்குவமடைந்து வருகிறது. முந்தைய வசை பாடுதலும், கோபமும், குமுறலும் இப்போது தணிந்து, ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளலில் வந்து நிற்கிறது. இப்போது தலித் எழுத்தாளர்கள் பெற்றிருக்கும் வாழ்க்கை வசதிகளும், கௌரவமும், சமூக அந்தஸ்தும் இதற்குக் காரணமாக இருக்கலாமோ? இருக்கலாம் - ஒரு வகை தலித் எழுத்தாளருக்கு, தாங்கள் அடைந்துள்ள மத்திய தர அந்தஸ்தைப் பற்றிய பிரக்ஞை கொண்டவர்களுக்கு இது சாத்தியமே.

ஆனாலும், இலக்கிய பூர்வமான, கலாரீதியான வெளிப்பாட்டிற்குக் காரணம், சமூக விமரிசகனாக இருந்த தலித்தின் இடத்தை, இப்போது படைப்பாளியும் கலஞைனுமான தலித் எடுத்துக் கொண்டுள்ளான். அவனுடைய வெளிப்பாடுகள் குறியீடுகளாக, உருவகங்களாக வெளிப்படுகின்றன. அவன் பழைய தொன்மங்களை, புராணங்களை மறுவாசிப்பிற்கு, புதிய விளக்கத்திற்கு உட்படுத்தி புதிய அர்த்தங்களைக் காண்கிறான். புது தொன்மங்களை, புது புராணங்களை உருவாக்குகிறான். பழைய அனுபவங்கள் புதிய வர்ணங்களைச் சேர்த்துக் கொள்கின்றன. மனிதனிடமிருந்து மனிதனைப் பிரித்தல் - ஒதுக்கி வைத்தல் தொடர்ந்து நடந்து வருகிறது.

பிரித்தலும், ஒதுக்கி வைத்தலும் ஒருவருக்குச் சார்பாக இருந்தாலும் சரி, எதிராக இருந்தாலும் சரி, ஒதுக்குதல் ஒதுக்குதலே. அது தொடர்கிறது. முன்னர் எதிராக இருந்தது. இப்போது சார்பாக நடக்கிறது. எப்படி இருந்தாலும் சமூகம் பிரிவுபடுகிறது. பிரித்து வைத்து சலுகைகளையும், வசதிகளையும் தருவது சிலருக்கு வெட்கமளிப்பதாக இருக்கிறது, கூச்சப் படுபவர்கள் கலைஞர்கள். மற்றவர்களுக்கு, ஆதாயம் உள்ள எதுவும் தொடர்வதில் மகிழ்ச்சி என்றார் தயா பவார் (சுபமங்களா, மார்ச் '95).

இந்திய அளவிலும், தமிழ் நாட்டிலும் ஒடுக்கப்பட்டோருக்காக அம்பேத்கரும், பெரியாரும், சமூக சீர்திருத்தவாதிகளும் குரல் கொடுத்த போது ஊர் பக்கமே வரவிடாமல் நுழையவிடாமல் கரித்துக் கொட்டிய பார்ப்பன வெறியர்களின் வாரிசுகள் இன்று பக்கம், பக்கமாய் தலித் இலக்கியம் பற்றி பேச வேண்டிய நிர்ப்பந்தம் என்ன? சித்தர் முதல் புத்தர் வரை எடுத்த சீர்திருத்த, பகுத்தறிவு கண்ணோட்டங்களையெல்லாம் ஏற்கனவே இந்து மதத்தில் உள்ள இன்னொரு பிரிவு என்று சொல்லி அதன் வீரியத்தை நீர்த்துப் போகச் செய்யும் தந்திரத்துடன் இன்று தலித் இலக்கியம் பற்றியும் அதன் முதல் தாக்குதல் இலக்கான பார்ப்பனியத்தை மூடி மறைத்து சமரசக் கண்ணோட்டமுடைய தலித் படைப்புகளின் கருத்துக்களை முன்னிறுத்தி ஒடுக்கப்பட்டோரின் முரண்பாடுகளுக்கிடையே உலா வருகிறது பார்ப்பனியம்.

அக்கம் பக்கமாய் நடக்கும் தீண்டாமைக் கொடுமைகளையும், சாதிய ஒடுக்கு முறைகளையும் இன்று வரை ஏறெடுத்துப் பார்க்காத இந்த பார்ப்பனக் கும்பல் ஆப்பிரிக்காவின் நிறவெறியைப் பற்றி பக்கம் பக்கமாக எழுதியது. உன்னுடைய பார்ப்பனிய வர்ண ஒடுக்குமுறைக்கு பதிலென்ன என்று கேட்டால், தலித்துக்களின் தயாள குணத்தைப் பற்றி எழுதி பரந்த மனப்பான்மைக்குப் பாதை காட்டுகிறது. தயா பவர் போன்ற தலித் படைப்பாளிகளின் கருத்தைக் கொண்டே, தலித்துக்களின் தாக்குதல் இலக்கை திசை திருப்புவதும் முக்கிய எதிரியான பார்ப்பனியத்தைப் பாதுகாப்பதும் தான் சுபமங்களா, வெங்கட்சாமிநாதனின் இலக்கிய சேவை.

வெங்கட் சாமிநாதன் நினைப்பதையே தயா பவர் சொல்லும் போது வேலை சுளுவாக முடிந்து விடுகிறது. தன் பேச்சின் முத்தாய்ப்பாக தயா பவர் சொல்வதாய் எழுதி உச்சி குளிர்கிறார் வெங்கட்சாமிநாதன். ''நான் போராடிக் கொண்டிருக்கும் என் எதிரி, என் பார்வைக்குத் தெரியும் திடப்பொருள் அல்ல. கண்ணுக்குப் புலப்படாத சரித்திரமும், வாழ்க்கை மதிப்பீடுகளும்தான் என் எதிரி, அவற்றுடன் தான் என் போராட்டம். நாம் தேர்ந்தெடுக்காது பொறுப்பாளியாகாத குற்றத்தைச் சுமந்து பிறந்துள்ள மனிதர்கள் அல்ல'' என அத்வைதத்திற்கு பொழிப்புரை போடுகிறார் பவர்.

**நான் போராடிக் கொண்டிருக்கும் என் எதிரி, என் பார்வைக்குப் படும் திடப்பொருள் அல்ல. கண்ணுக்குப் புலப்படாத சரித்திரமும், வாழ்க்கை மதிப்பீடுகளும்தான் என் எதிரி. அவற்றுடன்தான் என் பேராட்டம்.**

''அரசியல் வாதியும், கலைஞனும் இங்கு தான் வேறுபடுகிறார்கள். தயா பவர் ஓர் கலைஞன்'' என தர்ப்பை கட்டு கட்டி விசயத்தை முடிக்கிறார் வெங்கட் சாமி நாதன். புரிகிறதா பொருள்? எதிரியை இனங்கண்டு அடித்தால் அரசியல் வாதி, விலை கண்டு விழுந்தால் கலைஞன். இதுதான் இவர்களின் வேதம். நாம் அரசியல்வாதிகளாகவே இருப்போம்.

நமது எதிரிகள் இரத்தமும், சதையுமாய் நேரில் நிற்கும்போது நாம் வெறும் சரித்திர ஆராய்ச்சியில் மூழ்கிப்பயனில்லை. நமக்குத் தேவை பயன்படுத்த சில ஆயுதங்கள், இலக்கியம் உட்பட.

படிப்பகம்

## வரலாறு:

# அவுரி விவசாயிகளின் போராட்டம்

பணம் ஒரு கன்னத்தில் பிறவி ரத்தக் கறையோடு உலகுக்குள் நுழைகிறது; மூலதனமோ தலை முதல் குதிக்கால் வரை உடலின் ஒவ்வொரு துவாரத்திலிருந்தும் ரத்தமும் அழுக்கும் கொட்டிய வண்ணம் வருகிறது. ஏகபோக மூலதனமோ எங்கே செங்கோல் ஊன்றுகிறதோ அங்கே அடிமைகளின் மண்டை ஓடுகளுக்காக வேட்டை நாய்களோடு அலைகிறது. ஏகாதிபத்திய காலனி ஆட்சி என்றாலே ஒளிவு மறைவில்லாத சூறை, அடிமைகளின் கூட்டம், மனிதப் படுகொலைகள் என்பது வரலாறாகிவிட்டது.

இந்தியாவின் மீது ஆங்கிலேய காலனியாதிக்கமும் அவ்வாறுதான் நடந்தது. ஆங்கிலேய ஏகாதிபத்தியமும் இந்திய மக்களின் அனைத்து உரிமைகளையும் கொள்ளை அடித்துக் கொண்டது. நிலம், நீர், உயிரினம் என்று விவசாயிகளின் அனைத்து ஜீவாதார உரிமைகளையும் பறித்துக் கொண்டது. ஏகாதிபத்திய அத்து மீறல் எந்த வேகத்தோடு நடந்ததோ அதற்கு எதிராக ஆதிவாசிகளின், விவசாயிகளின் எழுச்சியும் தொடங்கியது.

1856 சந்தால் ஆதிவாசிகளின் போராட்டம், முதல் சுதந்திரப் போரான 1857 சிப்பாய்களின் புரட்சி ஆகியவற்றைத் தொடர்ந்து, விடுதலைப் போராட்ட போர் இந்தியாவெங்கும் வீசிப் பரவிக் கொண்டிருந்த கட்டடத்தில் 1860-இல் முதன் முதலாக கட்டுப்பாடான ஒரு போராட்டம் தொடங்கியது. அதுதான் விவசாயிகளின் ‘அவுரி எதிர்ப்புப் போராட்டம்’.

நவீன ரசாயனத் தொழில் உற்பத்தி தொடங்குவதற்கு நூறாண்டுகள் முன்னாலேயே இயற்கைச் சாயம் இந்தியாவில் தயாரிக்கப்பட்டது. பல்வேறு செடிகளிலிருந்து காய்ச்சி வடித்துத் தயாரிக்கப்பட்ட சாய வண்ணங்களை வைத்து வீட்டுச் சுவர்களில் ஓவியம் வரைந்தார்கள் ஆதிவாசிகள்; வண்ணச் சீலைகளில் ஓவியம் தீட்டினார்கள் கலைஞர்கள். அதில் ஒன்றுதான் அவுரி நீலச்சாயம். அவுரிச் செடியிலிருந்து இறக்கியதுதான் அவுரி நீலச்சாயம்.

நவீன பருத்தி ஆலை வளர்ந்த பிறகு, பிரிட்டனில், 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் நிறைய அவுரிச்சாயம் தேவைப்பட்டது. ஆங்கிலேய வியாபாரிகள் சாயத் தொழிலில் அதிகமான கொள்ளை அடிக்கலாம் என்று கண்டு கொண்டதும் அதற்கான உற்பத்தி பற்றி திட்டம் போடத் தொடங்கினார்கள். கிழக்கிந்தியக் கம்பெனியின் ஓய்வு பெற்ற அதிகாரிளும், புதிய அதிகாரிகளும் பீகார் வங்காளத்தின் ஜமீன்தார்களிடமிருந்து நிலம் வாங்கி பெரிய அளவில் அவுரி தோட்ட தொழில் அமைத்தார்கள். இந்திய சாயத் தொழில் நுட்பத்தின் மீதும் ஆங்கிலேயச் செங்கோல் ஊன்றப்பட்டது.

ஆங்கிலேயரின் கோல் செங்கோல் அல்ல; வெங்கோல் - வெம்மையான, கொடூரமான அடக்குமுறைக் கோல்; முதலில் ஆங்கிலேயர்கள் ஜமீன்களிடமிருந்து நிலங்களை வாங்கி, அவர்களையும் ஈடுபடுத்தி அவுரி பயிரிட்டார்கள். அடுத்து, சிவ விவசாயிகளைப் பிடித்து சொந்த நிலத்தில் அவுரி பயிரிட ஒப்பந்தம் போட்டார்கள். அவர்கள் போட்டது சமனற்ற ஒப்பந்தம். அதற்கு முன்பணம் தந்து ஆசையும் காட்டினார்கள். முன்பணம் என்பது தூண்டில் போல. இதன் மூலம் அடுத்தடுத்து அவுரி மட்டுமே பயிரிட வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தை விவசாயிகளுக்குக் கொடுத்தார்கள் ஆங்கிலேயர்கள். சணல், புகையிலையில் லாபத்தோடு பயிர்த் தொழில் செய்த விவசாயிகள் அவுரியில் நட்டம் அடைந்தார்கள்.

ஆங்கிலேய தோட்ட முதலாளிகளின் நேரடி நிர்வாகத்தின் கீழ் விவசாயக் கூலிகள் கடுமையாகக் கசக்கிப் பிழியப்பட்டார்கள்; சொந்த நிலம் கொண்ட விவசாயிகளோ அவுரியில் நட்டம் அடைந்து நடுத்தெருவுக்கு வந்தார்கள். இவ்விரண்டுவகை அவுரி விவசாயத்திலும் பாதிக்கப்பட்ட கூலி, மற்றும் சொந்த விவசாயிகள் உரிமை பறிபோனதை உணர்ந்து கொண்டார்கள். தாங்களாகவே ஆங்கிலேய அடக்குமுறையையும், அவுரியை

> ஏகாதிபத்திய காலனி ஆட்சி என்றாலே ஒளிவு மறைவு இல்லாத சூறை, அடிமைகளின் கூட்டம், மனிதப்படு கொலைகள் என்பது வரலாறாகிவிட்டது.

யும் எதிர்த்தார்கள். தாங்கள் மோசம் போனதால் கோபத்தோடு போராடினார்கள். தாங்களும் சக விவசாயிகளுமாக எல்லோரும் எல்லா உரிமையும் இழந்து மோசம் போனதை உணர்ந்ததும் ஒன்றாக, ஒரு சக்தியாகத் திரளத் தொடங்கினார்கள்.

‘நாங்கள் விரும்புவதைப் பயிர் செய்ய முடியவில்லை’ என்று அன்றைய விவசாயிகள் சொன்னார்கள். அவர்கள் மட்டுமல்ல; ஆங்கிலேய தலைமை நீதிபதி ஆஷ்லே ஏடன் கூட இங்கிலாந்துக்கு இங்கே பயிரிடுவது சுதந்திரான செயலாக இல்லை, என்று அறிக்கை அனுப்பினார். அந்த அளவுக்குக் கொடூரமான சித்திரவதைகளை விவசாயிகள் அனுபவித்தார்கள்.

ஒரு சில ஜமீன்தார்களைத் தவிர, பலர் ஆங்கிலேயருடன் கூட்டுச் சேர்ந்து சித்திரவதைகளை நடத்தினார்கள். அவுரி பயிரிடாத விவசாயிகளை மரத்தில் கட்டிவைத்துப் கட்டிப் பிரம்பால் அடித்துப் பயமுறுத்தினார்கள்; வெள்ளை தோட்ட முதலாளிகளுக்குப் பாக்கி வைத்த விவசாயிகளைக் கடத்தினார்கள்; சட்டத்துக்குப் புறம்பாகக் கைது செய்து தனிக் கொட்டடிகளில் அடைத்தார்கள்; ஏகாதிபத்திய வாணிபத்தைக் கேலி செய்யும் கார்ல்மார்க்ஸ் 'எவ்வளவு **இனிமையான** வாணிபம்' என்று எழுதுவார். அதுபோல, அவுரி பயிரிடும் நிலங்களை ஆங்கிலேயர் கணக்கிடுவதே அலாதிதான்! 2 ½ ஏக்கரில் பயிரிட்டால் அவன் 1 ஏக்கர் என்று எழுதுவான். கேள்வி கேட்க முடியாது. எழுதுகாலி பக்கத்திலேயே நீளமான சாட்டை மேசை மீது கிடக்கும்.

அறுவடை செய்து அவுரிச் செடிகளைக் கட்டுக் கட்டாகக் களத்தில் போட்டிருப்பார்கள். இரண்டு கட்டுகளுக்கு ஒரு கட்டுதான் கணக்கில் வரும்.

குத்தகைதாரரை நிரந்தரக் கடனாளிகளாக்கி அவர்களது சொத்தைக் களவாடுவதற்கு துரைமார்கள் தனித் திட்டம் வகுத்தார்கள். இரவோடு இரவாகப் பயிர்களுக்கு தீ வைத்தார்கள். கேள்வி கேட்டவரின் வீட்டுச் சாமான்களைத் தெருவில் வீசினார்கள். வீடுகள் கொளுத்தப்பட்டன. அவர்களின் ஆடு, மாடுகள், கோழிகள் கொள்ளை அடிக்கப்பட்டன; அல்லது குளம், ஏரியில் மூழ்கடித்துச் சாகடிக்கப்பட்டன.

ஆங்கிலேய தோட்ட முதலாளிகளுக்குள்ளேயே ஒருவர்க்கொருவர் லாப வெறியோடு அடித்துக் கொண்டார்கள். ஒரு அவுரி ஆலை முதலாளி தன் ஆலைத் தொழிலாளிகளைத் திரட்டிக் கொண்டு இன்னொரு முதலாளியோடு மோதுவான். இடையில் பலியாவது இந்தியத் தொழிலாளிகளே.

அவுரியால் லாபமிழந்து, குத்தகைப்



படிப்பகம்

www.padippakam.com

அவுரி விவசாயிகளின் வழியில் கர்நாடக விவசாயிகள் - அமெரிக்க கார்கில் விதை நிறுவனத்தைத் தாக்கி அழிக்கும் காட்சி



பணமும், வட்டியும் கட்ட முடியாமல் திண்டாடும் விவசாயிகளை ஆலை முதலாளி கடத்திச் சென்று 'தேவைப்பட்டால்' கொன்றும் போட்டு விடுவான்.

அவுரி தோட்ட முதலாளிகள் சிலர் பாரம்பரியமாகவே கொடியவர்கள். அவர்களின் குடும்பமே அமெரிக்க அடிமை வியாபாரத்தில் லாபம் பார்த்த குடும்பங்கள். அவர்களுக்குச் சித்திரவதைகள் என்றால் 'வெல்லம்'; 'பொழுது போக்கு'.

நிர்ப்பந்தங்களால் அவுரி பயிரிடத் தொடங்கி நிலத்தையும், சொத்தையும், மானத்தையும் இழந்த விவசாயிகள் பல முறை ஆட்சியாளருக்கு அறிக்கை அனுப்பினார்கள்; வழியே சென்ற கவர்னர் துரையை மறித்து அங்கேயே பிரச்சனைகளை அறிவித்தார்கள். இதன் காரணமாக கவர்னர் ஜெனரல் துரையே சுற்றறிக்கை ஒன்றை விடுத்தார். ''கோர்ட்டுகளில் மக்களின் பிரச்சனை பதிவாகியுள்ளது. இந்த நிலை தொடருவது ஆங்கிலேய கவுரவத்திற்கே இழுக்கானது, அவமானகரமானது; உள்ளூர் நிலச் சொந்துக்காரர்களின் அமைதிக்கும், சந்தோஷத்துக்கும் கேடு விளைவிப்பது''.

நகர்ப்புறத்திலும் கூட விவசாயிகள் அடக்கப் படுவதற்கெதிராகக் கருத்து பரவுவதை அறிந்த கீழ்நிலை ஆங்கிலேய அதிகாரிகளும், நீதிபதிகளும் அவுரி பற்றிய கமிஷனைக் கோரினார்கள். கமிஷன் அறிக்கைக் குறிப்பில் வங்காள லெப்டினன்ட் கவர்னர் அவுரி பயிரிட்டதால் ஒட்டாண்டியான விவசாயிகளின் கோரிக்கைகள் நியாயமானதே என்று எழுதினார்.

ஆனால் கடைசி ஆணை பிறப்பிக்கப்படும் கடைசி நிமிடம் வரை ஆங்கிலேய தோட்டத் துரைமார்களின் கொள்ளையும் அடக்குமுறையும் தொடர்ந்தது.

ஒடுக்குமுறைகளுக்கும், ஜீவாதார உரிமைக்குமாக ஒன்றுபட்டுப் போராடுவது என்று அவுரி விவசாயிகள் தீர்மானித்த மறுகணத்திலிருந்து தன்னெழுச்சியாக அவர்கள் ஒரு அமைப்பாக, ஒரே குரலாக எழுச்சி பெற்றார்கள். மிகவும் அடிப்படையான உயிர் போன்ற உரிமை என்பதால் மான உணர்வு கொண்ட ஒரு சில ஜமீன்தார்களும் சேர்ந்து கொண்டார்கள்; சில இடங்களில் தலைமையும் தாங்கினார்கள்.

அவுரி பயிரிடுதலுக்கு எதிர்ப்பான ஒரு மையம் கட்டப்பட்டது. ''எங்கள் நிலத்தில் என்ன பயிரிடுவதென்பதை நாங்களே தீர்மானிப்போம். அவுரி பயிரிட மாட்டோம்'' என்ற முழக்கத்தை அமைப்பு முன் வைத்து பிராந்திய முழுமைக்கும் வேலை நிறுத்தம் அறிவித்தது. பரசத் மாவட்டத்தில் தொடங்கிய வேலை நிறுத்த எழுச்சி நாடியா, ஜெசூர், பப்னா, ராஜ்சாகி, மால்டா, பரித்பூர், முர்ஷிதாபாத் ஆகிய ஏழு மாவட்டங்களில் பற்றிக் கொண்டது. இந்து-முசுலீம் பேதமின்றி விவசாயிகள் ஒரே உறுதி மொழி எடுத்துக் கொண்டார்கள். ஒரு கிராமத்து மக்களின் போராட்டத்துக்கு ஆதரவாக மற்றொரு கிராமத்து மக்களுக்கு பறையடித்துச் செய்தி தெரிவிக்கப்பட்டு திரட்டப்பட்டார்கள். தோட்ட முதலாளிகளுக்கு எதிராக எல்லா வகையான ஆயுதங்களும் ஏந்தப்பட்டன. சமிக்ஞை அனுப்பப்பட்டன; பதில் சமிக்ஞை பெறப்பட்டன, மையத்திற்குச் சந்தாக்கள் வசூலிக்கப்பட்டன.

பறை ஒலி எங்கேயாவது கேட்டால் காட்டில் பற்றிய சிறு பொறி போல அது கிளம்பி விடும்; சிறிது நேரத்தில் பிரச்சனைப் பகுதியில் எல்லாப் பகுதியிலிருந்தும் விவசாயிகள் திரண்டு வந்து சேர்ந்து விடுவார்கள்.

முக்கிய ஜமீன்கள், தாலூக்தார்கள், வட்டிக் கடைக்காரர்கள், கிராமத்தலைவர்கள், அவுரி ஆலை ஊழியர்கள் போராட்டத்தில் ஒரு பகுதியாக மாறியதால் எதிரிக்குச் சமூக அடித்தளம் இல்லாமல் அவர்கள் போலீசிடமும், கவர்னரிடமும் துண்டைக் காணோம், துணியைக் காணோம் என்று ஓடினார்கள்.

போராட்டத்தைப் பற்றிய அதிகாரிகளின் அறிக்கைகள் பலநூறு போர்க்குணமிக்க செய்திகளை நமக்குச் சொல்கின்றன. பிரிட்டிஷ் இந்தியாவின் நிலச்சுவான்தார் மற்றும் வர்த்தகக் கழகத் தலைவர் அறிவித்தார்; ''அவர்கள் கேட்பது வெறும் தள்ளுபடி, ஒப்பந்தத் தள்ளுபடி மட்டும் அல்ல. அவர்கள் ஒன்றாகத் திரண்டு கடன் கொடுத்தவர்களையும், தோட்ட முதலாளிகளையும், எல்லா ஐரோப்பியர்களையும் வெளியே துரத்த உறுதி பூண்டு விட்டார்கள்.

**பறை ஒலி எங்கேயாவது கேட்டால் காட்டில் பற்றிய சிறு பொறி போல அது கிளம்பி விடும்; சிறிது நேரத்தில் பிரச்சினைப் பகுதியில் எல்லாப் பகுதியிலிருந்தும் விவசாயிகள் திரண்டு வந்து சேர்ந்து விடுவார்கள்**

கடன்கள் மட்டும் ரத்து செய்யப்படவில்லை; சொத்துக்கள் பறிமுதல் செய்து மீட்கப்பட்டன. அவில்தார் ஷீபோ கான் பப்னா மாவட்ட நீரன்பூர் ஆலைக்கு வந்த போது 2000 விவசாயிகள் ஈட்டி, வில், கம்பு, துப்பாக்கிகளோடு சூழ்ந்து கொண்டு ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்; நீதிபதியின் குதிரையை ஈட்டியால் குத்திக் கொன்றார்ள். நிலைமை தீவிரமாவதைப் பார்த்த ஆங்கிலேய துரைமார்கள் 'விவசாயிகள் கலகத்தை அடங்குங்கள்', 'கலகக்காரர்களைத் கடுமையாகத் தண்டியுங்கள்' என்று கதறினார்கள்.

ஜே.பி. கிராண்ட் என்ற வங்காள லெப். கவர்னர் கமிஷன் குறிப்பில் அவர்களுக்குப் பதில் சொன்னார்: ''ஒரு லட்சம் மக்களின் எதிர்ப்பும் கலகமும் ஆர்ப்பாட்டமும் ஒரு குறிப்பிட்ட அவுரிச்சாய விற்பனை என்ற வியாபாரப் பிரச்சனையை விட ஒன்றும் பெரிதில்லை என்று யாரும் கருதினால், அவர்கள் காலத்தைச் சரியாகக் கணிக்கவில்லை என்றுதான் பொருள். நீதியைப் புறக்கணித்து விட்டு போராட்டத்தை அடக்குமானால், அரசு விரைவிலேயே பெரும் விவசாய எழுச்சியால் தண்டிக்கப்படும். ஐரோப்பா மற்றும் பிற தலைநகரங்கள் மீது அதன் தாக்கம் பேரழிவாக இருக்கும்; அதை யாரும் கற்பனை செய்து கூடப் பார்க்க முடியாது.''

அது யதார்த்த உண்மை. ஆயிரக்கணக்கான விவசாயிகளின் ஐக்கியம், ஏகாதிபத்திய எதிர்ப்பு, சொந்த மண்ணின் விடுதலை லட்சியம், அதற்கான ஒரு மைய அமைப்பு, நடவடிக்கைகள் என்று நிகழ்ச்சிகள் தீவிரமானதும் அவுரி எதிர்ப்பதையும் தாண்டி போராட்டம் மேலே பாய்ந்து செல்லும் என்று எதிரிகளுக்குப் புரிந்து விட்டது. அதற்கொரு முடிவு கட்ட வேண்டும் - போகப் போக, அவர்களுக்கு விவசாயிகளின் உரிமையில் வைத்த கையை விலக்கிக் கொண்டால் போதும் என்று ஆகி விட்டது.

விவசாயிகளின் போராட்டம் மேலே சென்றது கிராமப்புறத்தில் மட்டுமல்ல, நகர்ப்புறத்திலும் கணிசமான ஆதரவை வெற்றி கொண்டது. நகர்ப்புற மத்

படிப்பகம்

www.padippakam.com



அவுரி விவசாயிகளின் வழியில் தமிழக விவசாயிகள் - சீர்காழி வட்டாரத்தில் இறால் பண்ணைகளை எதிர்த்துப் போராடும் காட்சி

திய தர வர்க்கத்தைச் சேர்ந்த ஹரீஷ்சந்திர முகோபாத்தியாயா, கிரீஷ் சந்திர பாசு, தீனபந்துமித்ரா போன்ற அறிவாளிகள், அமிருத பஜார் பத்திரிக்கையின் நிறுவனர் சிசிர்குமார் கோஷ் மற்றும் பலரும் ஆதரவு அளித்து ஒவ்வொரு நாளும் எழுதிய எழுத்துக்கள் 'ஏகாதிபத்திய எதிர்ப்பு - விவசாயிகளின் போராட்ட ஆதரவு அலையை தட்டி எழுப்பின. தீனபந்து மித்ராவின் 'நீல தர்பன்' (நீல ஆடை) என்ற நாடகம் அவுரி எழுச்சியுணர்வைத் எரி நெருப்பாக விசிறி விட்டது. மற்ற ஜனநாயக சந்திகளுக்கும், செய்தி பரவத் தொடங்கியவுடன்தான் அரசு 'அவுரி கமிசனை' அறிவிததது.

அதே சமயம் ராம் மோகன் ராய் போன்றோர் தம் ஜமீன்தார் வர்க்கப் புத்தியைக் காட்டிக் கொண்டனர். ''ஏதோ ஒரு சில அரை குறை காயங்களை அவுரி தோட்டதுரைமார் ஏற்படுத்தியிருக்கலாமே தவிர தோட்டங்கள் உள்ள பகுதியில் மக்கள் நன்றாக உடை உடுத்துகிறார்கள். அவர்களின் வாழ்க்கை நிலை நன்றாகவே உள்ளது. இதை நான் நேரில் பார்த்தேன்'' என்று பச்சையாக தன் வர்க்க நலனைக் காட்டிக் கொண்டார் மோகன் ராய். இப்படிப்பட்ட போலிப் பகட்டுச் சீர்திருத்தவாதிகளை யதார்த்த வரலாறு அன்றே தனது காலால் உதைத்து ஓரத்தில் தள்ளி விட்டது.

ஆங்கிலேய நாய்கள் இந்த கட்டத்தில்தான் உண்மையைப் புரிந்து கொண்டு விழித்துக் கெண்டதா என்றால் இல்லை. 40 ஆண்டுகள் முன்பே இப்பிரச்சினை கவனத்துக்கு வந்தபோது மின்டோ பிரபு 'அமைதி, சமாதானம், மக்களை அரவணைத்துச் செல்வது, என்றெல்லாம் தங்கள் கொள்கையைப் பற்றி தேளொழுகச் சொன்னார். திப்பு, மராத்தாக்கள், பிரெஞ்சுக்காரர்கள், ஐரோப்பாவில் நெப்போலியன் என்று ஏராளமான எதிரிகளோடு ஒரே நேரத்தில் உலகில் போர் புரிவது சாத்தியமில்லை என்ற பீதியோடு மின்டோ அன்று அப்படிச் சொல்லியிருக்க வேண்டும். உள்ளூரில் எந்த தோட்டத்துரைமார்கள் இதுபற்றி கவலைப் பட்டார்கள்? விளைவு, 50 ஆண்டுகளுக்குள் ஒரு பெரிய விவசாய எழுச்சி.

அவுரி எதிர்ப்பு அலை இந்தியச் சமூகம் முழுக்க ஏற்படுத்திய வீச்சும், 'அவுரி கமிசன், முன்பாக விவசாயிகள் தொடுத்த சூளுரைகளும்தான் ஆங்கிலேயனைக் கலக்கி விட்டன.

விவசாயிகள் என்ன ஊழித் தெய்வங்களா? விவசாயிகள் இப்படியும் பேசுவார்களா?

கமிசன் முன்பு அப்படித்தான் அந்தப் போராளிகள் பேசினார்கள்; ''எதிர்காலத்திலாவது, ஏதாவது சுமுகமான விதிகளை ஏற்றுக் கொண்டு அவுரி பயிரிடுவீர்களா?'' என்ற கேள்வி வேண்டுமென்றே திரும்பத் திரும்பக் கேட்கப்பட்டது.

''யாருக்கு வேண்டும் உன் விதிகள்? அது மானத்தை விற்றுப் பிழைப்பவனுக்கு அல்லவா? ஏ நாய்களே! லாபமானால் என்ன, நட்டமானால் என்ன, அவுரியைப் பயிரிடுவதை விடச் செத்துப் போவது மேல்'' - பதில் வெட்டொன்று துண்டிரண்டாகக் கறாராக விழுந்தது.

''உனக்கு யார் மீது அசையாத நம்பிக்கை உள்ளதோ அவர்கள் சொன்னால் பயிரிடுவாயா?'' - ஒழுக்கம் கெட்ட வெள்ளையனின் புழுத்துப் போன நா அசைந்தது.

''என் தாய் தந்தையே சொன்னாலும், அப்படி எவர் சொன்னாலும் கூட அவுரி பயிரிட மாட்டேன'' - விவசாயிகுலின் மண்டல் செவுட்டில் அறைவது போலச் சொன்னார்.

ரெவரண்ட் ஜேம்ஸ் பாதிரியார் வாக்குமூலம் கொடுத்த போது; ''எங்கெல்லாம் சென்றேனோ அங்கெல்லாம் மக்கள் என்னை மடக்கினார்கள். உங்கள் தோட்டத் துரைமாரிடம் அடக்குமுறையைக் குறைக்கச் சொல்லேன். போ, முதலில் அங்கே போய் உபதேசம் செய்'' என்று மக்கள் தன்னை விரட்டியதைச் சொன்னார்.

அந்த வாக்குமூலங்கள் தகிக்கும் நெருப்புத் துண்டுகள். அவை வந்து விழுந்தவுடனே அரசு அவுரி பயிரிடுவதை நிறுத்தச் சொல்லி கட்டளை போட்டது.

அவுரி எதிர்ப்புப் போராட்ட வெற்றி அவை விடுதலைப் போராட்டச் செய்தியை திக்கெட்டும் கொண்டு சென்றது. அப்போராட்டம் அதோடு நிற்கவில்லை. பப்னா மாவட்டத்தில் ஜமீந்தாரி எதிர்ப்பு நில உரிமைப் போராட்டமாக விரிவடைந்தது.

எரிமலைகள் தொடர்ந்து வெடித்தன. '47 துரோகத்துக்குப் பிறகும் வெடித்தன.

ஆளும் வர்க்க நலனில் ஊறிய காங்கிரசு, ஆட்சிக்கு வந்த பிறகு பழைய அவுரி எதிர்ப்புப் போராட்ட வரலாற்றை இருட்டடிப்பு செய்தது. அதே போல எடுபிடி வரலாற்றாசிரியர்களோ காந்தி தலைமையேற்று நடத்திய சம்பரான், பர்தோலி போராட்டங்களைப் பெரிதாகத் தீட்டி வன்முறை அற்ற சத்தியாக்கிரகப் பேராட்டத்தை நெட்டி முன் தள்ளினார்கள். சிப்பாய்களின் புரட்சியை சிப்பாய்க்கலகம் என்று இழிவு படுத்தியது போல மக்கள் திரள் சார்ந்த மாபெரும் அவுரி எதிர்ப்பு விவசாயி எழுச்சியை 'கலகம்' என்று காட்ட முயற்சிக்கப்பட்டது. ஆளும் வர்க்கம் இன்று வரை எவ்வளவு விரும்பினாலும் அந்த வரலாறுகளை மறைக்க முடியவில்லை.

இன்று, இதோ, அவுரி விவசாயிகளின் போராட்டங்களின் தொடர்ச்சியாக அதே போர்க்குணத்தோடு தஞ்சை மண்ணின் விவசாயிகள் இறால் பண்ணைகளை அழிக்க மண்ணின் உரிமை மீட்கும் எழுச்சிப்போரை நடத்தப் போகிறார்கள்!



படிப்பகம்

www.padippakam.com

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

## பகல்பூர் குற்றவாளிகள்

**கங்கைக் கால்வாய்களில் மிதந்து வந்தன நூற்றுக் கணக்கான பிணங்கள்; காலி ஃபிளவர் வயல்களிலிருந்து கண்டெடுக்கப்பட்டன நூற்றுக்கணக்கான மண்டையோடுகள். ஈவிரக்கமில்லாமல் முஸ்லீம் பெண்களையும் குழுந்தைகளையும் கண்ட துண்டமாக வெட்டிக் கொன்ற பகல்பூர் கலவரம்தான் அது.**

**1989-இல் நடைபெற்ற அந்தப் படுகொலையை விசாரிக்க நியமிக்கப்பட்ட கமிஷன், 6 ஆண்டுகளுக்குப் பின், சென்ற மாதம் தனது அறிக்கையை பீகார் அரசுக்குக் கொடுத்துள்ளது. இக்கலவரத்தை முன் நின்று நடத்திய கொலைகாரர்களின் தலைவன் அத்வானி இவ்வறிக்கை பற்றி வாயே திறக்கவில்லை.**

**விசாரணைக் கமிசனின் 3 நீதிபதிகளும் தெரிவித்துள்ள கருத்துக்கள் வருமாறு:**

**நீதிபதி ஆர்.என். பிரசாத் உள்ளூர் நிர்வாகம், வட்டாரக் கமிசனர், வட்டார ஐ.ஜி., பிராந்திய டி.ஐ.ஜி., மாவட்ட நீதிபதி, போலீஸ் சூப்பிரண்டெண்டண்ட் ஆகியோரே கவலரத்திற்குப் பொறுப்பு என்று குற்றம் சாட்டுகிறார்; மற்ற இரு நீதிபதிகளான சம்சுல் அசன், ஆர்.பி. சின்கா இருவரும் கலவரத்துக்குக் காரணமான 90 சதம் குற்றவாளிகள் தப்பவிடப்பட்டனர் என்று குறிப்பிடுகிறார்கள்.**

**அந்தக் கலவரத்தில் மொத்தம் 2200 முசுலிம் உயிர்கள் அழிக்கப்பட்டுள்ளன. இப்போது அறிக்கை வந்த பிறகு கூட, மாநில, மத்திய அரசுகள் இரண்டுமே மவுனம் சாதிக்கின்றன.**

**323 பக்கமுள்ள மொத்த அறிக்கை தெளிவாக இரண்டு செய்திகளைச் சொல்கிறது. ஒன்று: கலவரம் நடக்கப் போகிற அபாயகரமான சூழ்நிலைமை பற்றி காங்கிரசு முதலமைச்சருக்கும், அவரது அதிகாரிகளுக்கும் தெரியும்; ஆனால் அவர்கள் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை - அலுவலகத்திலும், பங்களாக்களிலும் சுகமாக இருந்து கொண்டு நிலைமை மோசமடைய அனுமதித்தார்கள்; இரண்டாவது: போலீஸ் படை முற்று முழுவதுமான முசுலீம் எதிர்ப்பாக இருந்தது. கலவரம் பற்றி எரிந்த போதும், கிராமங்களில் இரண்டு மாதம் பரவிய போதும், அப்பாவி முசுலீம்களைக் காப்பாற்ற போலீஸ் சிறு முயற்சி கூட எடுக்கவேயில்லை.**

**விசாரணைக் கமிசன் அறிக்கையைப் பற்றி குல்தீப் நய்யார் ஒரு கட்டுரை எழுதியுள்ளார், அவ்வளவே. அறிக்கையின் விவரங்களைக் கூட பத்திரிகைகள் எதுவும் வெளியிடவில்லை. முசுலீம் மக்களைக் கொல்வதென்பது அன்றாட அரசியலுடன் கலந்து போன ஒரு சாதாரண நடவடிக்கை என்று பத்திரிகைகளும் கருதுகின்றன போலும்!**



யாசமே இல்லை. 1987-ல் பிஏசி, மீரட்டில் உள்ள ஹசிம்புராவிலிருந்து 40 முசுலீம்களைப் பிடித்தார்கள், காசியாபாத்துக்கு டிரக்கில் ஏற்றிக் கொண்டு போகும வழியிலேயே சுட்டுக் கொன்று ரத்தக்களறி செய்து வெறியாட்டம் போட்டார்கள். அக்கொலைகாரர்களை இன்று வரை தண்டிக்கவில்லையே ஏன்'' - இது ராயின் கேள்வி.

இதே போல பகப்பூரில் ரத்தப்படுகொலை செய்தவர்களில் (பார்க்க பெட்டிச் செய்தி) ஒரே ஒரு ஆய்வாளர் மீது மட்டுமே குற்றச்சாட்டு போடப்பட்டிருந்தது. இந்த வன்முறைகளுக்கு மேல்நிலையில் உள்ள எஸ்பி. டிஎஸ்பி, ஐஜி, கமிஷனர் ஆகிய அதிகாரிகளைப் பொறுப்பாக்கித் தண்டிக்க வேண்டும் என்றர் ராய். ஒரு மதக்கல்வரம் 24 மணிநேரத்துக்குள் அடங்கவில்லையானால் உடனே மாவட்ட ஆட்சியாளர் எஸ்பி இருவரையுமே தற்காலிக வேலை நீக்கம் செய்ய வேண்டும். ஒரு கலவரம் அதற்கும் மேல் நீடித்தால் அங்கே அரசின் சம்மதமும், கூட்டும் இருக்கிறது என்று பொருள்.

முசுலீம்கள் கலவரங்களில் அதிக அளவில் கொல்லப்படுகிறார்கள், இழிவுபடுத்தப்படுகிறார்கள். காரணம் அதிகரித்துவரும் இந்துமதவெறி அரசு நடுநிலை வகிப்பதில்லை என்று குற்றம் சாட்டுகிறார் ராய். இதற்குத் தீர்வாக போலீஸ் படையில் மேலும் முசுலீம்களுக்கு வேலை கொடுக்கப்படவேண்டும் என்றார் அவர்.

அரசு நிர்வாகத்தில் தாழ்த்தப்பட்டோருக்குத் தரப்பட்டிருக்கும் இடஒதுக்கீடு, அம்மக்கள் மீதான உயர்சாதி வெறியர்களின் தாக்குதலைத் தடுத்து, நிறுத்துவதற்கும், குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கும் எந்த அளவு பயன்பட்டிருக்கிறது? காவல்துறையில் முஸ்லீம்களுக்கு குறிப்பிட்ட அரசு வேலை கொடுத்தாலும், அது முஸ்லீம்கள் மீதான இந்துமத வெறியர்களின் தாக்குதலைத் தடுப்பதற்கு அந்த அளவுதான் பயன்படும். இது ஒருபுறமிருக்க

இனவுணர்வு, வர்க்க உணர்வு, மொழியுணர்வு போன்றவையெல்லாம் தங்களுக்கும் இருப்பதாகக் கூறிக் கொள்ளும் பல அதிகாரிகளும் அரசு ஊழியர்களும் நம்மிடையேயும் இருக்கிறார்கள். அவர்கள் அடிக்கின்ற சவடாலில் அரைக்கால் பங்குக்கு ஏதேனும் செய்திருந்தால் கூட, இத்தகைய 'அரசாங்க ரகசியங்கள்' பலவற்றை அம்பலத்துக்குக் கொண்டு வந்திருக்க முடியும்.

காவல்துறை உயரதிகாரி ராய் வெளிக் கொண்டு வந்துள்ள உண்மைகள் இந்திய அரசின் மதசார்பின்மை வேடத்தை அம்பலப்படுத்துகின்றன. இதைச் செய்வதில் அவர் காட்டியுள்ள துணிவு, நம்மிடையே உலவும் 'அதிகார வர்க்க முற்போக்காளர்களின்' வேடத்தை அம்பலப்படுத்துகிறது.

— குப்பண்ணன்

படிப்பகம்

அசிரியரும் வெளியீடுபவரும்: வி.வல்லபேசன், 22, சாமியார் தோட்டம், ஆலந்தூர் சாலை, சாலை சைதாப்பேட்டை, சென்னை-600 018

www.padippakam.com

PUTHIYA KALACHARAM R.N.42647/87 REGD.NO.TN/MS(S) 637



# பர மண்டலத்திலிருக்கும் பரம பிதாவே...!

நீர் உயிர்த்தெழுந்த மூன்றாம் நாள்...
சிலுவை புனிதமாகி விட்டது.
மெழுகுவர்த்தியின் அழுகை
மெருகேறிவிட்டது.

மேய்ப்பரின் மனம் நோகாமல்
மந்தைகள் தாமாகவே
சந்தைக்கு விரைகின்றன.

குப்பங்களை விழுங்கி விட்டன
'அப்பங்கள்'.
சேரியின் குருதியை
'ஞானஸ்நானம் குடித்து விட்டது'.

அணு ஆயுத விற்பனை லாபத்தில்
பங்குத் தந்தைகளின்
உலக சமாதானத்துக்கான பிரசங்கம்
அருள் பொழிகிறது.

அற்புதம்... அற்புதம், சர்த்தாவே!
ஆனாலும்
தேவ கிருபையால்
குருடர்களுக்குப் பார்வை வந்தபோது
காண்பதற்கு ஏதுமில்லை.

முடவர்கள் நடக்க ஆரம்பித்தபோது
நடப்பதற்குப் பூமி இல்லை.

தனிப்பெரும் கருணையும்
தனியார் கட்டுப்பாட்டில்.
சாத்தானின் ஏவலா?
என் சந்தேகம் தீர்ப்பாய்.

இறால் குஞ்சுகள்
நெற்களஞ்சியங்களை உடைக்கின்றன.
கூலி கேட்டு முழங்குபவர்களை
பட்டியிலடைத்து விட்டு
மேய வருபவைகளுக்கு
திறக்கிறது நெய்வேலி.

வருத்தப்பட்டு பாரம் சுமக்கும்
விசுவாசிகளை
பரலோகத்துக்கு அழைக்கிறது விலைவாசி.

சட்டத்தின் பாவமன்னிப்பை
மொத்தமாய் வாங்கி
'தான் செய்வது
இன்னதென்று தெரிந்தே'
விற்கிறார்கள் நாட்டை.

எழுதப் படிக்கத் தெரியாத
எல்லோர்க்கும் சேர்த்து
ஒரே கைச்சாத்தில்
உனது மந்தைகளை
உலகச் சந்தைக்குத் துரத்தும்
கட்டு விரியன் குட்டிகளின்
அற்புதங்களை விளக்கிச் சொல்ல

அரைநொடியும் தாமதியாது
ஆண்டவரே வாரும்
ஆமென்.

துரை. சண்முகம்

படிப்பகம்